Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 330 பங்குனி. March. 2024

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

30TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A




# சமூக ஊடக போராளிகளுக்கு காத்திருக்கின்றது பேராபத்து

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி



## மனித இனத்தின் எதிர்காலம் ஏன் விண்வெளி ஆய்வில்

## ஆ நான்கு கோடியா?

சர்வதேச பெண்கள் தினச் சிறப்பிதழ்

வெற்றிமணி கௌரவ ஆசிரியர்

கவிதா லட்சுமி நோர்வே


International Women's Day
March 08

கவிதா லட்சுமியின் நடைபயணம்

அனைவருக்கும் எங்கள் சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள்

இதழ்: 330




# அட எங்கடை பூவரசம் வேலி!

எங்கு சென்றாலும் மூன்று கண்ணோடு செல்பவன் இந்தக் கண்ணன். கண்ணன் என்பது நானேதான். நான் கண்ட காட்சி நீ காணவேண்டும்என்ற கண்ண தாசன் வரிகள் எனுடன் வரிந்து கட்டிக் கொண்டன. பார்ப்பேன் இரசிப் பேன் (படம்) பிடிப்பேன்.

கடந்த மாசி மாதம் 14 நாட்கள் இயற்கையின் அழகான கரீபிக்தீவுகளிலும், கடலிலும் வாழ்ந் தேன். இன்ரநெற் இல்லை. ஆகா! அதற்கு நிகர் வேறு இல்லை. அதனை நான் பெற முயற்சிக்கவும் இல்லை. 1980 களில் இருந்த மனித வாழ்க்கை. எத்தனை அழகு. யாவும் நேருக்கு நேர். என்ன ஒரு நெருக்கம். நீங்களும் இணையத்திற்கு வெளியே ஒரு 7 நாட்கள் ஒரு விரதம்போல் வாழ்ந்து பாருங்கள். அதன் அற்புத அழகை, அமைதியை கண்டு இரசிப் பீர்கள். கைதொலை பேசி என்னோடு பேசவி ல்லை. விரும்பியதை படம் பிடித்துக்கொண்டது அவ்வளவு தான்.

கரீபியன் தீவில் பூவரசம் வேலி. சித்திரை இதழில் நிறைய நினைவுச் சித்திரங்களுடன் பேசுவோம்.







வெற்றிமணி

தமிழ் எங்கள்
உயிருக்கு மேல்

ஓசை : 330



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

கௌரவ ஆசிரியர்:
கவிதா லட்சுமி நோர்வே

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276




கவிதா லட்சுமி

# கவிதா லட்சுமி

## கவிதா லட்சுமி தன்பெயரையே தனித்துவமாக, தன்னைத்தானே சுயமாகச் செதுக்கி வருபவர்

கவிதா லட்சுமி என்று வாசித்தால், அல்லது கேட்டால் போதும். எமது கண் முன்னே வந்து நிற்பது, அவர் கலை மீதி கொண்டுள்ள பற்று. அவர் கலையை மட்டும் வளர்க்கவில்லை, கலா ரசிகர்களின் இரசனையையும் உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் செல்கிறார்.

பரதம், கவிதை, கட்டுரை, சித்திரம் என நான்கு தளத்திலும், சொன்னதையே திருப்பி திருப்பி ஒப்படைக்காத தன்மை கவிதா லட்சுமியின் சிறப்பு என்று துணிந்து கூறலாம்.

பரீட்சாத்தியமாக பல முயற்சிகளை செய்தவண்ணம் உள்ளவர். நோர்வே நாட்டில் கலாசாதனா என்ற நடன பள்ளியை நிறுவி பல மாணவர்களை பரதக்கலையில் வளர்த்து வருபவர். இவருக்கு கிடைத்த பெரும் கொடை, அவருக்கு கிடைத்த, கிடைக்கும் மாணவர்கள். பல சிறப்புகளுக்கு சொந்தக்காரியான பல்கலை வித்தகியாக விளங்கும் கவிதா லட்சுமி அவர்களை

வெற்றிமணி பத்திரிகையின் பங்குனி மாத பெண்கள் தின சிறப்பிதழின் கௌரவ ஆசிரியராக வெற்றிமணி கௌரவித்து மகிழ்கிறது.

**என்றும் தமிழுடன்**
**மு. க. சு. சிவகுமாரன்.**

# சமூக ஊடக போராளிகளுக்கு காத்திருக்கின்றது பேராபத்து



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

நிகழ்நிலை காப்புச் சட்டம் (Online Safety Bill) இலங்கையில் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. பெப்ரவரி முதலாம் திகதி இது நடைமுறைக்கு வந்த ஒரு சில தினங்களிலேயே, இச்சட்டத்தின் கீழ் ஒருவர் கைதாகியிருக்கின்றார்.

சமூக ஊடகம் ஒன்றில் அவர் வெளியிட்ட பதிவு ஒன்றுதான் அவரது கைதுக்கு காரணம். அதாவது, நடைமுறைக்கு வந்த உடனடியாகவே தமது ஆட்டத்தை ஆரம்பித்துவிட்டது நிகழ்நிலை காப்புச் சட்டம்!

சமூக ஊடகங்கள் அரசியலில் தற்போது செல்வாக்கைச் செலுத்தும் ஒரு நிலை இப்போது உருவாகியிருக்கிறது. இந்தப் பின்னணியில் அவற்றைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுதான் இந்த சட்டமூலம் அரசரம் அவசரமாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. எதிர்க்கட்சிகள், மனித உரிமை அமைப்புக்கள், உலக நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியில் இது நடைமுறைக்கு வந்துவிட்டது.

இந்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதை நியாயப்படுத்தும் வகையில், இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்திய கருத்துக்கள் போதிளவுக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தமது உண்மையான நோக்கங்களை மறைப்பதற்காக



04 ஆம் பக்கம் பார்க்க...




03 ஆம் பக்கத் தொடர்ச்சி...



# சமூக ஊடக போராளிகளுக்கு காத்திருக்கின்றது பேராபத்து

அரசாங்கத்தினால் சொல்லப்படும் நியாயப்படுத்தல்களாகவே அவை பார்க்கப்படுகின்றன. மனித உரிமைகள் அமைப்புக்கள் எதுவும் அரசாங்கத்தின் கருத்தை ஏற்கவில்லை. இணையவழி மிரட்டல், வெறுப்பூட்டும் பேச்சு மற்றும் தவறான தகவல் போன்ற சிக்கல்களைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது என்பதுதான் அரசாங்கம் நிலைப்பாடு. இதனை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கம் சொல்லிக் கொள்ளும் காரணம் இதுதான். இந்த சட்டம் பாதுகாப்பான ஒன்லைன் சூழலை உருவாக்கும் என்றும் அரசாங்கம் கூறுகிறது.

தேசிய பாதுகாப்புக்கு வரக்கூடிய அச்சுறுத்தல்களை மேற்கோள் காட்டி, நிகழ்நிலை தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இந்த சட்டமூலம் அவசியம் என்று அரசாங்கத் தரப்பினர் வாதிடுகின்றனர். இதன்மூலமாக சிங்கள மக்களினதும், எதிர்க்கட்சிகளினதும் ஆதரவைத் தக்கவைக்க முடியும் என அரசாங்கம் நம்புகின்றது. இலங்கையின் டிஜிட்டல் பாதுகாப்பு குறித்த நற்பெயரை இந்த சட்டம் மேம்படுத்தும் அதேவேளையில், வெளிநாட்டு முதலீடு மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை ஈர்க்கும் என்ற கருத்தும் அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுகின்றது.

அதாவது, முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கும் இது அவசியம் என அரசாங்கம் சொல்கிறது.

## அரசின் அச்சம் இதுதான்

நியாயமான போராட்டங்களை கொடூரமாக ஒடுக்குவதற்கும், அந்த ஒடுக்குமுறையை சட்டத்தின் மூலமாக நியாயப்படுத்துவதற்கும் அரசாங்கத்துக்கு சில சட்டமூலங்கள் அவசியமாக இருக்கின்றது. தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை ஒடுக்குவதற்காக கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்திவருகின்றது. இப்போது, முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு அதற்கு மேலாக நிகழ்நிலைக் காப்புச் சட்டம் அரசாங்கத்துக்குத் தேவையாக இருக்கின்றது. நிகழ்நிலை காப்புச் சட்டம் அரசாங்கத்து எதற்காக இப்போது தேவையாக இருக்கின்றது?

2022 இல் வரலாறு காணாத மக்கள் புரட்சி ஒன்றை இலங்கை சந்தித்தது. சிறிய பொறியாக உருவாகிய அந்தக் கிளர்ச்சி அரசாங்கத்தையே மாற்றியமைத்து, ஜனாதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் ஒரு நிலையை ஏற்படுத்தியது. இவ்வாறான ஒரு நிலை மீண்டும் வரக்கூடாது, என்ன விலையைக் கொடுத்தாவது அதனைத் தடுக்க வேண்டும் என அரசாங்கம் முற்படுகின்றது. இப்போது, கடுமையான பொருளாதார, அரசியல், சமூகப் பிரச்சினைகளை நாடு எதிர்கொள்கின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அரசாங்கம் கொடுக்காதததால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பபான ஒரு நிலையும் காணப்படுகின்றது. இந்தப் பின்னணியில், தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, தமது பாதுகாப்புக்காக, தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்காக, தேர்தலுக்குப் பின்னர் ஆட்சிக்கு வருபவர்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்திருக்கின்றது.



“இது மக்களின் பாதுகாப்புக்காகக் கொண்டுவரப்படுகின்றது என்று அரசாங்கம் சொல்லிக்கொண்டாலும், இதனால் மக்கள்தான் பாதிக்கப்படப்போகின்றார்கள். அரசாங்கம் தன்னைப் பாதுகாப்பதற்காகத்தான் இதனைக் கொண்டுவருகின்றது” எனச் சுட்டிக்காட்டுகின்றார் வெகுஜனப் போராட்டங்களுக்கான மக்கள் அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல்.

## கருத்து உரிமை மீறல்

ஐ.நா அமைப்புகளும் சர்வதேச உரிமைக் குழுக்களும் இச்சட்டத்தின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பிற அடிப்படை உரிமைகளை மீறுவது குறித்து கவலை தெரிவித்தன. இணையவழி பாதுகாப்புக்கான சர்வதேச தரங்களுக்கு இணங்குவது, உலகளாவிய டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் இலங்கையின் ஒருங்கிணைப்புக்கு இடையூறாக உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அரசியலிலும், சமூகத்திலும் சமூக ஊடகங்கள்தான் இப்போது ஆதிக்கம் செலுத்திவருகின்றன. உடனுக்குடன் செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்ற ஊடகமாகவும், சமகால நிகழ்வுகளை விமர்சத்துக்குள்ளாக்கி மக்கள் மத்தியில் கருத்துருவாக்கம் செய்வதில் அதிகளவுக்குச்

26 ஆம் பக்கம் பார்க்க...



# வெற்றிமணி பத்திரிகையின் பங்குனி மாத இதழின் கௌர ஆசிரியராக கௌரவம் பெறும் பன்முகக்கலைஞர் கலாசாதனா நிறுவனர்- நோர்வே



## கவிதா லட்சுமி அவர்களின் படைப்பாற்றல் ஒரு கண்ணோட்டம்



### பேராசிரியர் அ.ராமசாமி

எப்போதும் பெண்களின் ஊஞ்சலாட்டம் இன்னொருவரின் உதவியோடு நடப்பதாகவே நமது மனம் பதிவுசெய்து வைத்திருக்கிறது. இன்னொருவரின் உதவியோடு ஊஞ்சலாடும்போதே தான் தலைகீழாக விழுந்துவிடும் சாத்தியங்கள் இருப்பதாக நினைத்துப் பதற்றமும் அச்சமும் கலந்த பெண் சித்திரமே பலருக்கும் மனக்கண்ணில் தோன்றும்.

ஆனால் கவிதாலட்சுமியின் கவிதைக்குள் படிமமாக்கப்படும் ஊஞ்சலில், 'ஒரு பெண் அவளே அமர்ந்து, அவளே பெருவிரலால் உந்தி உந்தி ஆட்டிக்கொண்டு வேகம் ஊட்டுகிறாள். அந்த வேகம் சாதாரணமான ஊஞ்சலாட்டத்தின் வேகம் அல்ல. மரண பயம் தரும் வேகம். உடலின் ஆடையும் தலையின் கூந்தலும் அலைந்து திரியும் சித்திரமாக படிமம் விரிக்கப்பட்டிருக்கிறது. ஊஞ்சலாட்டத்தின் உச்ச நிலையில் ஒரு பெண்ணின் எதிர்பார்ப்பு என்னவாக இருக்கும்? என்று நினைத்துப் பாருங்கள்.

தன்னை நேசிக்கும் அல்லது அரவணைத்துக் கொள்ளும் ஆணொருவன் வந்து ஊஞ்சலின் கயிறுகளை இழுத்துப் பிடித்து நிலைப்படுத்திக் காப்பாற்ற மாட்டானா? என்று ஏங்கும். அந்த ஏக்கம் எப்போதும் தன்னைத் தாங்கிக் கொள்ள ஆணைச் சார்ந்திருக்கும் பெண்ணின் ஏக்கம்.

ஆனால் இந்தக் கவிதைக்குள் இருக்கும் பெண் அப்படிச் சார்ந்திருக்கும் மனநிலையை முற்றிலும் நிராகரிப்பவள். ஊஞ்சலின் வேகமும் பறத்தலின் கிறக்கமும் மனத்திற்குள் உண்டாக்கும் அதிர்வுகளை ரசிப்பவள். அவளுடைய இலக்கு பாதுகாப்பாக இருப்பதல்ல் பறத்தலின் உச்சநிலையை அவாவி நிற்பது.



### கவிஞர் மு.மேத்தா

கவிதாவின் கவிதைகளில் – சந்தங்களின் ஓசை நயம் கேட்பதில்லை. சொந்தங்களின் உயிர் ஓலம் கேட்கிறது. கற்பனைகளின் அலங்காரம் காணப்படவில்லை. கவலைகளின் அஸ்திவாரம் காட்டப்படுகிறது. எழுதப்பட்ட கவிதைகள் அல்ல இவை இதயத்திலிருந்து எழுந்து வந்த கவிதைகள்.

கவிதாவின் கவிதைகள் ஒவ்வொரு மனதிலும் உட்புகுந்து கலகம் விளவிக்கும் கவிதைகளாகும். ஆற்றாமையும் இயலாமையும் தோற்றுவித்த அனுபவங்களின் வார்ப்படம் இது. சில சமயங்களில் கண்ணன் கைப் புல்லாங்குழலாகவும். பல சமயங்களில் களத்தில் நிற்கும் வீரனின் கைத் துப்பாக்கியாகவும் கவிதாவின் எழுதுகோல் அவதாரம் எடுத்திருக்கிறது. அரிதாரம் பூசாத அவதாரம் இது!

புலம் பெயர்ந்த ஒரு பெண்ணின் கவிதைகள் நிலம் பெயர்ந்து நம் நெஞ்சில் நுழைகின்றன. உள்ளத்தின் நாற்காலியில் உரிமையோடு அமர்கின்றன.



### பேராசிரியர் மௌனகுரு

துணிந்து கனகியை நாயகியாக்கி மேடையிற் கொணர்ந்த கவிதா லக்சுமிமீது நமக்கு ஓர் மதிப்புண்டாயிற்று. நாட்டிய நாடகங்களின் கருப்பொருளும் அவர் அதனை நிகழ்த்திய விதமும் அவரை ஏனைய பரத நாட்டிய ஆசிரியர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது.

முகநூலில், புதுமைபித்தனின் கதையை அடிப்படையாக வைத்து அவர் அண்மையில் தயாரித்த சிற்பியின் நரகம் பார்த்தேன். பிரமாதமான ஒளியமைப்பு.அருமையான நடன் அமைப்பு.

தாசி கனகியை மேடையிற் கொணர்ந்தவர். தாஸி பரவை நாச்சியைக் கொணர்கிறார். தமிழர் நடன மரபில் நடனம் வளர்த்த்வர்கள் இந்த தேவதாஸி மரபினர்தாம். இவர்களையும் இவர்கள் நடனத்தையும் விட்டு விட்டு தமிழர் நடன மரபினை எழுதிவிட முடியாது. இவர்களை மீண்டும் கொணர்கிறார் கவிதா லக்சுமி.

இதற்கு ஓர் புலமையும், துணிவும் வேண்டும். இவற்றைத் தொகுத்துப் பார்க்கையில் நம் மத்தியில் இருக்கும் நடன மணிகளுள் சற்று வித்தியாசமாகக் கவிதா லக்சுமி தெரிகிறார்.

14 ஆம் பக்கம் பார்க்க...




Luckyfly
SRI LANKA
SPECIAL
OFFER
ஸ்ரீலங்கா சென்றுவர
குறைந்த விலையில் மகிழ்ச்சியாக செல்ல...
இன்றே அழையுங்கள்!
799€
COLOMBO TO JAFFNA
TRANSPORT CHARGES
49€
BOOK ON CALL
info@lucky-fly.de
www.lucky-fly.de
0234 2399032
0179 14 84892



# வரவு எட்டணா செலவு பத்தணா... அதிகம் ரெண்டணா கடைசியில் துந்தனா!

## ‘சிறு துளி பெருவெள்ளம்’

”வரவு எட்டணா செலவு பத்தணா.. அதிகம் ரெண்டணா கடைசியில் துந்தனா ”வரவு எட்டணா செலவு பத்தணா .. அதிகம் ரெண்டணா கடைசியில் துந்தனா ... , வரவுக்கு மேலே செலவுகள் செய்தால் வாழ்க்கையில் நிம்மதி இருக்காது “ !

ஆம், இந்த பாடல் வெளியாகி சுமார் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் கடந்துபோயிருந்தாலும் .. பாடலின் தத்துவம் மட்டும் இன்று வரை நமக்கு சேமிப்பு மற்றும் சிக்கனத்தின் மகிமையினை சொல்லிக்கொண்டேதான் இருக்கின்றது ! சிக்கனம்,சேமிப்பு என்கிற இரண்டும் இல்லாத வாழ்க்கையின் விளைவு என்னவாகும் என்பதை சிரிப்போடு சிந்திக்க வைக்கும் சினிமா பாடல்தான்இது.

நவீனமயமான இன்றைய உலகில் ஆடம்பரத்துக்கும் பகட்டுக்கும் வீண்செலவு செய்வோர் அதிகம். அடுத்த வர்களுக்கு தாங்கள் குறைவில்லை என்று காட்டவே தேவையற்ற வீண் செலவுகளை செய்யும் வழக்கம் எம் சமூகத்தில் உள்ளது. ஆனால் அதன் விளைவு எமக்கு ஒருபோதுமே சாதகமாகஅமையப்போவதில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் பட்ஜெட் போடும் பழக்கம் குடும்பத் தலைவிக்கோ, தலைவனுக்கோ அவசியம் தெரிந்திருக்க வேண்டும். வரவு, செலவு எவ்வளவு என்பதை அறிந்து அதற்குள் வாழ்க்கை நடத்துவதுதான் மிகவும் பாதுகாப்பானது. அதிலும், எதிர்காலத்துக்கான சேமிப்பே நம் முதல் செலவாக இருப்பது மிக மிக முக்கியமானது. அந்த சேமிப்புக்கான வழிகள் என்ன, அது நமக்கு வழங்கும் பாதுகாப்புகள் என்னென்ன என்பதுபற்றியெல்லாம் பேச நிறையவே இருக்கின்றது.

சேமிப்பு என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் அவசியமான ஒன்று. நாம் வாழும் இந்த அவசர உலகில் பணம் என்பது எவ்வளவு முக்கியம் என்று நம் அனைவருக்குமே தெரியும். பணம் இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது. வாழ்வதற்கு பணம் தேவை என்ற நிலையில் இருந்து பணம் இருந்தால் தான் வாழ முடியும் என்ற நிலையில் இருக்கின்றோம். அதனால் சேமிப்பு பழக்கமும் சிக்கனமும் இருந்தால் தான் ஒருவர் வாழ்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும்

நாம் அன்றாடம் பயன்படுத்தப்படும் பல பொருட்களின் விலை வரிசையாக உயர்ந்து கொண்டே வருகிறது. சில பொருட்கள் விலை எவ்வளவுதான் உயர்ந்தாலும் அதை கட்டாயம் வாங்கி பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைகளில் இருக்கிறோம். சிக்கனத்தினை கடைப்பிடித்து சேமிப்பினை பெருக்கும்போது, அந்த சேமிப்பு நமக்கு பலவகையில் முதலீடாக மாறக்கூடியது. இதனால்தான் வருமானம் குறைவாக இருக்கிற்றபோதிலும் அதற்குள் எவ்வளவு சேமிக்க முடியும் என்பதனை முதலில் நாம் சிந்திக்கவேண்டியுள்ளது.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

நம்மில் சிலர் இருப்போம், சேமித்தால் பெரும் தொகையாக சேமிப்போம், இல்லை என்றால் சேமிப்பு பக்கமே ஒதுங்க மாட்டோம் என்று நினைத்துக்கொண்டிருப்போம். அப்படி இல்லாமல் ‘சிறு துளி பெருவெள்ளம்’ என்பதை மனதில் வைத்துக்கொண்டு முதலில், சிறிய தொகையாக இருந் தாலும் தவறாமல் சேமிக்கத் தொடங்குவது நல்லது. காலப்போக்கில் சேமித்த பணத்திலிருந்து கொஞ்சம் எடுத்து பிறவற்றில் முதலீடு செய்ய ஆரம்பிக்கும்போது அதன் விளைவு நம்மை மென்மேலும் சேமிப்பினை நோக்கி ஈர்க்கச் செய்யும் என்பது என்பது கண்கூடு. இந்த உலகில் பிறவி பணக்காரர்களாக பிறப்பவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். ஆனால் உழைப்பாலும் சேமிப்பாலும் உயர்ந்தவர்களே இந்த உலகில் அதிகமாக இருக்கிறார்கள். அதனால் நாம் அனைவரும் சிறிய தொகையாக இருந்தாலும் அதை சேமிக்க வேண்டும்.

இங்கே நாம் மற்றுமோர் விடயத்தினையும் கவனத்தில் கொள்வது நல்லது ,சேமிப்பு என்று சொன்னவுடன் நாம் முதலீடுகளை நோக்கி மட்டுமே சிந்திக்க தொடங்குவோம். ஆனால், அப்படி சேமிக்க நினைக்கும் நமக்கு குடும்பச் சூழல் காரணமாகவோ அல்லது அவசரக் காலத்திற்காகவோ வாங்கிய கடன் மறந்திருக்கும். சேமிப்பைத் தொடங்கும் நபர் முதலில் மனதில் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் கடன்களை முடிப்பது. அல்லது கடனை சீக்கிரம் முடிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுப்பது. மாதத் தவணைகள் போன்ற அதிக வட்டிக்கு வாங்கிய கடன்கள், ஈட்டு நகை கடன்கள் போன்றவற்றுக்கான கடன்களை செலுத்துவதற்கு முன்னுரிமை கொடுப்பதும், முடிந்தவரையில் அவ்வாறான கடன்களை தவிர்ப்பதும்கூட நமக்கு பணத்தினை சேமிப்பதற்கான பாதையாக மாறிவிடும் என்பது அனுபவபூர்வ உண்மை.

உடலில் வலிமை இருக்கும் வரையில் தான் எம்மால் உழைக்க முடியும் இளமை பருவம் கடந்து விட்டால் உழைப்பது கடினமாகி விடும். வாழ்வின் எல்லா நேரங்களிலும் வேலைவாய்ப்பு வருமானம் என்பது ஒரே போல இருக்காது. இக்கட்டான சந்தர்ப்பங்களில் பிரச்சனைகளில் இருந்து வெளிவர நமக்கு யாரும் உதவாத சந்தர்ப்பங்களில் நமது சேமிப்பு எமக்கு உதவியாக இருக்கும். இளமைக் காலத்தில் நாம் சேமித்து வைப்பதனால் முதுமைக் காலத்தில் அது நமக்கு உதவியாக இருக்கும். அதுமட்டுமன்றி கோடையில் தான் நீரின் அருமை தெரியும் என்று சொல்வார்கள். அதுபோல தான் மனித வாழ்க்கையில் பிரச்சனைகள் தோன்றும் போது தான் சேமிப்பின் அருமையும் புரியும். அதனால் நம் எதிர்காலத்திற்காக சம்பாதிக்கும் பணத்தை சிக்கனமாக செலவு செய்து சேமித்து வைப்போம்.



# அச்சக் கலாச்சாரம்
## Culture of fear


ஓவியம் : Edvard Munch

சமூக ஊடகங்களில அவதூறு பரப்புவதும் தனிமனித தாக்குதல்களில் ஈடுபடுவதும் அதிகரித்துவருகின்றன. நேர்மையாகவும் அறிவார்ந்தும் சிந்திப்பவர்கள், மனிதர்கள் மீதும் சமூகத்தின் மீதும் உண்மையான அக்கறை கொண்டவர்கள் இத்தகைய செயல்களைச் செய்யமாட்டார்கள். இத்தகையோரின் இத்தகைய இழிசெயல்கள் துளியும் பொருட்படுத்தத் தேவையற்றவை. ஆனால் இதற்குப் பின்னால் உள்ள இவர்களின் உளவியலையும் நோக்கங்களைக் குறித்தும் பார்ப்பது பயனுள்ளது.

இது சமூக ஊடகங்களின் வரவுக்கு முன்பிருந்தே நிலவி வருகின்ற போக்குத்தான். ஆனால் சமூக ஊடக வரவிற்குப் பின்னர் புற்றீசல் போல் அல்லது கிருமி போல் பல்கிப் பெருகிப் பரவியுள்ளது இந்த அவதூறுக் கலாச்சாரம். தமிழ்ச் சூழலில் மொட்டைக் கடிதம் இதன் தொடக்கமாகக் கொள்ளக்கூடியது.

இதன் நோக்கம் பல்வேறுபட்டது. தம்மோடு முரண்படுபவர்களை அவமானப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுகிறது. தற்போதைய சூழலில் அதிகாரத்தைக் கட்டிப்பிடிப்பதில் முனைப்பாக இருப்பவர்கள் இதில் அதிகம் ஈடுபடுகின்றனர். தமக்கு ஜால்ரா போடும் சில்லறைகளைத் தூண்டிவிட்டும் முகநூல், வைபர், வாட்ஸ்அப் பொன்ற இன்னபிற சமூக ஊடகக் குழுமங்களில் கீழ்த்தனமான தனிமனித தாக்குதல்களிலும் அவதூறுகளைப் பரப்புவதிலும் கூச்சமின்றி ஈடுபட்டுவருகின்றனர்.

ஒரு சமூகம் எத்தகைய பிறழ்வுக்குள்ளும் சிதைவுக்குள்ளும் சென்றுகொண்டிருக்கின்றது என்பதற்கான எடுத்துக் காட்டுகளில் இது முக்கியமான அம்சம். அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான கெடுநோக்குடன் அச்சக் கலாச்சாரத்தினை (Culture of fear) உருவாக்குகின்ற போக்கு அரசியலில், வேலைத்தளங்களில், நிறுவனங்களில் நிலவுகின்ற ஒன்றுதான்.

வேலைத்தளங்களிற் தொழிலாளர்கள் இப்படியான பயக்கலாச்சாரத்தினால் தமது அதிருப்திகளையும் தலைமைக்கு எதிரான கருத்துகளையும் வெளிப்படுத்தத் தயங்கும் நிலை திட்டமிட்டு ஏற்படுத்தப்படுவதுண்டு.

மனிதர்களின் உளவியலை ஒருவகைப் பய உணர்வுக்கு உட்பட்டதாக வைத்திருப்பதற்கு அதிகார சக்திகள் கைக்கொள்கின்ற உத்திதான் இந்தப் அச்சக் கலாச்சாரம். எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்ள நேரும் என்ற பயத்தினால் வெளிப்படையாகத் தமது கருத்துகளைச் சொல்வதற்குத் தயங்கித் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவைப்பது இதன் இலக்கு. இந்த அச்சநிலை மாற்றம் விரும்புவோரைக் கட்டுப்படுத்தும் என்பதும், ஏன் வீண்சோலி என ஒதுங்க வைக்கும் என்பதும் இவர்களின் நோக்கமாகும்.

அவதூறு பரப்பித் தனிமனித தாக்குதல்களில் ஈடுபடுவோர் மீதுள்ள ஒரு பொதுக்குணம் எந்தவொரு வியடத்தையும் கருத்து ரீதியாக எதிர்கொள்ளவே மாட்டார்கள். எதிர்வினையாற்ற மாட்டார்கள். திரும்பத் திரும்ப அவதூறுகள், பொய் பரப்புதல், தனிப்பட்ட தாக்குதல்கள், இழிவுபடுத்தல்கள், வசைபாடல்கள், என்பதாகவே அவர்களின் அணுகுமுறை இருக்கும்.

இது தனிமனிதர்களை இலக்கு வைத்ததாகவும் எதிர்க்குரல் எழுப்புபவர்களைக் கூட்டாக இலக்கு வைத்ததாகவும் நடாத்தப்படுகின்றது. இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் தனிமனிதர்கள் மட்டுமல்ல, நிறுவனங்களும் தமக்கு ஆதரவாகச் செயற்படக்கூடிய உஷார் மடையர்களை வைத்தும் இச்செயல்களைச் செய்துவருகின்றனர்.

மட்டுமல்லாமல் பாலியல் ரீதியான வசைகள், அண்களளென்றால் பெண்களோடும் பெண்களை ஆண்கனோடும் பாலியல் ரீதியாகத் தொடர்புபடுத்திப் வதந்திகளைப் பரப்புதல் எனவாக அடிப்படை மனித நாகரீகமற்று பிறழ்வு மனநிலையுடன் தாக்குதல்களை மேற்கொள்வது இவர்களுடைய பாணி.

முரண்பாடுகளைக் கருத் தியல் ரீதியாக முன்வைப்பது முக்கியமானது. விவாதங்களும் கருத்துகளும் தனிநபர் தாக்குதல்களாக வெளிப்படுவதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை இழிவுபடுத்துவதும் அநாகரிகமானது. அவை எந்தவிதத்திலும் ஏற்புடையவையல்ல. தனிபட்ட தாக்குதல்கள் மூலமும் அவதூறுகளைப் திட்டமிட்டமுறையில் பரப்புவதனூடாகவும் சம்பந்தப்பட்டவர்களையோ அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையோ அவமானப்படுத்துவது அனுமதிக்கக்கூடாத அணுகுமுறை. கடுமையான கண்டனத்திற்குரியவை.


ரூபன் சிவராஜா
(நோர்வே)

---



# கரீபிக் கடல்

கரீபியன் தீவுகளிலும், கடலிலும்
14 நாட்களில் உருவான
குடும்பக் கதை,

காட்சிகள் யாவும், சரித்திர
பின்னணியிலும்,
படமாக்கப்பட்டுள்ளது.



கதை வசனம் ஒளிப்பதிவு இயக்கம்
கண்ணா B.F.A





# சூனியக்காரியின் பதக்கம்

கவிதா லட்சுமி (நோர்வே)

பொதுவெளியில் இயங்கிவரும் பெண்களை ஆபாசமாகச் சித்தரிப்பதும் பரப்புரை செய்வதும் அன்றுபோல் இன்றும் பரவலாக நிகழ்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பெண்களை பொதுவெளிக்கு வரவிடாமல், குடும்ப நிறுவனத்திற்கு ஒப்புக்கொடுக்கச் செய்வதன் ஒரு செயற்திட்டமாகவே சூனியக்காரி வேட்டையானது வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது. பொதுவாக வீடுதாண்டிச் சமூகத்திற்காகவும் தனக்காகவும் செயற்படும் பெண்களை இன்றைய சமூகம் கையாளும் முறையை சூனியக்காரி வேட்டையின் ஒரு தொடர்ச்சியாகவே பாரக்க முடிகிறது. இதன் பொதுக்கூறுகளும் நோக்கமும் வேறு வேறானவை அல்ல.

சென்ற ஆண்டு நான் நடைப்பயணம் சென்றிருந்தேன். நடைப்பயணம் பற்றி எழுத ஏராளமானவை உண்டு என்றாலும் என்னை மனதளவிற் பாதித்த, என்னைச் சற்றே அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஒரு விடயத்தைப் பற்றிப் பேசத் தோன்றுகிறது.

போர்த்துக்கல்லில் இருந்து ஸ்பெயின் நாட்டில் போய் முடிவடைந்த நடைப்பயணம். அது சண்டியாகோ டி கொம்பஸ்டெல்லா என்ற பழைமையான சிறப்புமிக்க ஒரு தேவாலயத்திற் சென்று நிறைவடைந்தது. தேவாலயக் கதைகள், வரலாறு என்பவை ஒருபக்கம் இருக்கட்டும். தேவாலயத்தினைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் கடைத் தெருக்களைப் பார்க்கும் ஆவல் வயதுவந்த பின்னரும் விட்டுவைப்பதில்லை. இக்கடைத் தெருக்களில் விசேடமாக விற்பனைக்கு வைக்கப்பட்ட பொருட்களில் ஒன்று 'சூனியக்காரி'களின் உருவங்கள். அவை சிலைகளாக, பதக்கங்களாக, சாவிக்கொழுவிகளாகப் பல வடிவங்களில் விற்கப்படுகின்றன.

தேவாலயங்களுக்கும் சூனியக்காரிகளுக்கும் ஆவதில்லையே என்ற யோசனையோடு அவை பற்றிய விபரங்களை நடந்தபடியே தேடத்தொடங்கினேன். சூனியக்காரிகள் நமக்குச் சிறுவயதில் குட்டிக் கதைகளிலேயே அறிமுகமாகிவிடுகிறார்கள். ஒரு சூனியக்காரி என்றால் யார்? அவள் எப்படி இருப்பாள்? அவளுடைய நடவடிக்கைகள் என்ன? என்பது பற்றி எல்லாம் எமக்கு ஒரு பிம்பம் சித்திரக்கதைகள் மூலம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ஏதுமற்ற வெறுமையான ஒரு விடயத்தையே சூனியம் என்பர். அறிவற்றவள் என்ற பொருளைக் கொண்டுள்ளவாறு சூனியக்காரி என்ற பெயர் வைத்து அழைத்தனர்.

## சூனியக்காரிகள் கொல்லப்பட்ட வரலாறு

ஐரோப்பிய நாடுகளில் சூனியக்காரிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் ஒரு காலத்தில் இலட்சக்கணக்காகக் கொன்று குவிக்கப்பட்டு, அழிக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையில் யார்தான் இந்தச் சூனியக்காரிகள் என்று அறியும் ஆவல் என்னைத் தொற்றிக்கொண்டது.

சூனியக்காரிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் ஊருக்கு வெளியே இருந்த அன்றைய மருத்துவர்கள். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காலத்தில் இயற்கை மூலிகைகளைப் பற்றிய அறிவுடையவர்களாக அப்பெண்கள் இருந்திருக்கிறார்கள்.



இறப்பின் தறுவாயில் இருப்பவர்களைக் காப்பாற்ற முடிந்தவர்களாகவும், இரத்தத்தைக் கண்டு அஞ்சாதவர்களாகவும், மகப்பேறு பார்ப்பதில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஆண் மருத்துவர்களால் குணப்படுத்தமுடியாத வியாதிகளைப் பல சமயங்களில் அப்பெண்கள் குணப்படுத்தியிருக்கின்றார்கள்.

இதனால், நோய்வாய்ப்பட்டவரைக் குணப்படுத்துதலும், உயிர்த்தெழ வைப்பதும் கடவுளர் செயலாகச் சொல்லப்பட்ட கதைகள் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டன. மருத்துவிச்சிகளின் போக்கு கடவுளர்க்கு எதிரான போக்காகப் பார்க்கப்படத் தொடங்கியது. சமூகத்திற் பெண்கள் நலிந்த நிலையில் இருந்த காலத்தில், துணிச்சல் மிக்கவர்களாகவும், அறிவு பொருந்தியவர்களாகவும் இப்பெண்கள் இருந்தமை ஆண் மேலாதிக்கச் சமூகத்திற்கு அச்சுறுத்தலாக இருந்திருக்கிறது. அதனாலே பல ஐரோப்பிய நாடுகளில் பல லட்சம் சூனியக்காரிகள் மக்கள் முன்பாக நிறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

10 ஆம் பக்கம் பார்க்க...




வெற்றிமணி திருமண சேவை




யேர்மனியில் Master படித்து முகாமையாளராக பணிபுரியும் நற்குணமுள்ள 29 வயது நிரம்பிய சைவ வேளாளர் குல எமது மகனுக்கு ஏற்ற நற்குணமுள்ள பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்:
+4915787447156

மங்கல இசைக்குழு

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர்
குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்





N.K.Raguraman
Dresdener
Str.6 50126
Bergheim
Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240




# சூனியக்காரியின் பதக்கம்

### அரசு மதம் ஆண்

1486 இல் கிருஸ்தவ மதக் குருக்களால் இலத்தின் மொழியில் எழுதப்பட்ட மல்லீயஸ் மாலெபிகாரம் என்ற நூல் ஜேர்மனியில் வெளியிடப்பட்டது. அது சூனியக்காரிகள் பற்றிய குறிப்புகளையும், அவர்களை அழிப்பதற்கான காரணங்களையும் முன்வைக்கிறது. 1400 - 1800 வரை சூனியக்காரிகளின் வேட்டை நடந்தேறியுள்ளது. ஆரம்பத்தில் ஆண் மேலாதிக்கச் சமூகத்தினராலும், பின்னர் அரசின் சட்ட நடவடிக்கையோடும் அவர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். அன்றைய காலத்தில் மிஷனரிகள் சூனியக்காரிகளின் அழிப்பில் பெரும் பங்காற்றியிருக்கிறது. அன்றிலிருந்து இன்று வரை, அரசுகளில் மதத்தின் ஆதிக்கம் என்பது முக்கிய பங்குவகிக்கிறது.

ஆணுக்குக் கீழ்ப்படிந்த மனைவியாக இருப்பதே மரியாதைக்குரியது. அந்த நிலையை சூனியக்காரிகள் சீர்குலைக்கிறார்கள் என்ற வகையில் நல்ல பெண்கள், சூனியக்காரிகள் என்ற இருநிலைப் பார்வையை சமூகம் வலியுறுத்தத் தொடங்கியது.




பெண்களின் உடலில் எற்படும் தழும்புகள், கீறல்கள் கூட சாத்தானுடன் உடலுறவு கொண்டதினால் ஏற்பட்டவை என்ற பரப்புரைகள் நடாத்தப்பட்டன.

சமூகத்தில் அறிவார்ந்து செயற்படத் தொடங்கிய பெண்களை ஆபாசமாகச் சித்தரிக்கத் தொடங்கினர். ஆணுறுப்பின் மேல் அமர்ந்து பறக்கும் பெண் என்ற கருத்துப்படவே துடைப்பக்கட்டையின் மேல் தொடைகள் தெரியப் பறப்பதாகச் சித்தரிக்கப்பட்டது. மறுமலர்ச்சிக் காலத்து ஓவியக்கலை, சூனியக்காரிகளை ஆபாசமாகவும், கொடூரமாகவும் காட்டத்தொடங்கின.

சாத்தான் இப்பெண்களின் உடலில் ஊடுருவிக் கொண்டிருக்கிறான், அதனாற் சாத்தானை ஒழிக்க இப்பெண்கள் ஒழிக்க ப்பட வேண்டும் என்ற கருத்தும், இப்பெண்களை அழிக்க அனைத்து ஆண்களும் ஒன்று சேரவேண்டும் என்றும், அன்றைய போப்பாண்டவரால் (15ஆம் நூற்றாண்டு) கோரப்பட்டது.

கிருஸ்தவ அரசும், மதமும் ஒருசேர மேற்கொண்ட பரப்புரைகளையும், சட்டத்தையும் தமக்குச் சாதகமாகப் பல ஆண்கள் பயன்படுத்தத் தொடங்கினர். கருத்து முரண்பட்ட மனைவியை, எதிர்த்து நின்ற பெண்களை, ஆணுக்குக் கீழ்படியாத பெண்களை, தனிப்பட்ட முரண்பாடுகளில் சிக்கிக்கொண்ட பெண்களை சூனியக்காரி என்ற பெயரிற் கொல்லத்தொடங்கினார் இத்தகைய கொலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சகஜமாகின.

அவர்கள் நிர்வாணமாக்கப்பட்டனர், 



கழுத்து நெரிக்கப்பட்டனர், தொங்கவிடப்பட்டனர், தீயில் எரியூட்டப்பட்டனர், சமுத்திரத்தில் எறியப்பட்டனர். பெண்களின் உடலில் தழும்புகள் மச்சங்கள் இருக்கின்றனவா என்று ஊர் முன்னிலையில் நிர்வாணமாக்கி பகிரங்கமாகச் சோதிக்கப்பட்டனர்.

இதன் காரணமாகப் பலர் தம்மைத்தாமே மாய்த்துக்கொள்ளத் தலைப்பட்டனர். நான் வசிக்கும் நோர்வேயில் இருந்து, ஜேர்மனி, ஸ்கொட்லான்ட், சுவிஸ் என்று நடைப் பயணம் முடிவுற்ற ஸ்பெயின் நாடுவரை கொல்லப்பட்ட சூனியக்காரிகளின் எண்ணிக்கை மட்டும் இலட்சத்தைத் தாண்டியிருப்பதாகத் தரவுகளிலிருந்து அறியமுடிகின்றது.

### அன்றைய சூனியக்காரிகளும் இன்றைய பெண்ணிய வாதிகளும்

அரசும் மதமும் இதற்கு பின் நின்றாலும், இதனை மதச் சார்பான செயலாக மட்டுமே பார்க்க முடியாது. ஆண் உயர்ந்தவன் பெண் கீழ்ப்படிந்தவள் என்று ஏற்படுத்தப்பட்ட சமூக உளவியல் அன்றும், இன்றும் பெரும் பங்கு வகிக்கிறது. குடும்ப நிறுவனத்தைத் தாண்டி பெண்கள் வெளிவருவதைத் தடுப்பது இதன் அடிப்படையாகும்.

பொதுவெளியில் இயங்கிவரும் பெண்களை ஆபாசமாகச் சித்தரிப்பதும் பரப்புரை செய்வதும் அன்றுபோல் இன்றும் பரவலாக நிகழ்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பெண்களை பொதுவெளிக்கு வரவிடாமல், குடும்ப நிறுவனத்திற்கு ஒப்புக் கொடுக்கச் செய்வதன் ஒரு செயற்திட்டமாகவே சூனியக்காரி வேட்டையானது வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது. பொதுவாக வீடுதாண்டிச் சமூகத்திற்காகவும் தனக்காகவும் செயற்படும் பெண்களை இன்றைய சமூகம் கையாளும் முறையை சூனியக்காரி வேட்டையின் ஒரு தொடர்ச்சியாகவே பாரக்க முடிகிறது. இதன் பொதுக்கூறுகளும் நோக்கமும் வேறு வேறானவை அல்ல.

தொழில் சார்ந்து பெண்கள் இன்று வளர்ந்திருப்பதை ஏற்றுக்கொண்டிருக்கும் சமூகம், பொதுவெளியிற் காத்திரமாகச் செயற்படும் பெண்களை ஒரு விதத்தில் சூனியக்காரிகள் போலவே நடாத்துகிறது. அன்றை சூனியக்காரிகள், இன்றைய பெண்ணியவாதிகள் என்று சொன்னால் மிகையாகாது.

இவைகளை எல்லாம் நடைப்பயணத்திற் தேடித் தெரிந்துகொண்ட பின் சூனியக்காரிகளின் மேல் எனக்குப் பெருமதிப்பு எழுந்தது. கண்கள் ஈரமாவதையும் தவிர்க்க முடியவில்லை. ஸ்பெயினில் நான் கடந்து வந்த பாதையில் சூனியக்காரிகள் எரியூட்டப்பட்ட நினைவிடம் ஒன்று இருந்திருக்கிறது. துரதிஸ்டவசமாக நினைவிடத்தைக் கடந்து வந்துவிட்டமை மிகக் கவலையளித்தது.

சூனியக்காரிப் பதக்கம் ஒன்றை வாங்கிக் கழுத்திற் கறுப்புக் கயிற்றில் அணிந்து கொண்டேன். எந்தத் தங்க வைர நகைகளும் தராத அழகினை அந்தப் பதக்கம் எனக்கு தருவதாகத் தோன்றுகிறது. ஆனாலும் என்னைத் தெரிந்தவர்கள் எல்லாம் ஏன் சூனியக்காரியைக் கழுத்தில் அணிந்திருக்கிறாய் என்று கேட்ட வண்ணமே இருந்தனர்.

தேவதைகள் என்றும் துர்தேவதைகள் என்றும் பகுப்பாய்வு நடாத்தும் இச்சமூகத்தின் முகத்தினை நிமிர்ந்து நோக்கும் திடமுடனும் மிடுக்குடனும் தொடர்ந்து நடையிடுவோம். பயணங்கள் நமக்குப் பற்பல அநுபூதிகளைத் தருகிறது. எப்போதும் பயணங்கள் இனியன!


டொட்மண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்




# எனக்கு மட்டும் ஏன் இப்படி?

எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றது என்ற கேள்வியைக் கேட்காமல் வாழ்க்கையைக் கடக்காதவர்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையில் அப்படி அல்ல் அனைவருக்கும் எதோவொன்றோ பலவோ ஏற்க முடியாதவை வாழ்வில் நடந்துகொண்டுதான் இருக்கிறது. புன்னகைக்குள் கண்ணீரை மறைத்தபடி சிலர் அதை இலகுவாகக் கையாளப் பழகிவிடுகிறார்கள். சிலர்தான் பிறர் வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்த்து தம் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் கண்ணீரும் கவலையுமாய் வாழ்வைப் புரிந்துகொள்ள முடியாமல் திணறிப்போகின்றார்கள்.

அதுவும் இன்றைய சமூக வலைத்தளங்களில் போடப்படும் பதிவுகளெல்லாம் தாம் மிக நன்றாக இருக்கின்றோம் என்பதைப் படங்களோடு பறைசாற்றுவதாகவோ் கடவுள் தமக்கு மட்டுமே தீங்கிழைத்துவிட்டார் எனக் கண்ணீர் வடிப்பதா கவோ அமைகின்றது. இந்த நடிகர்களின் வாழ்வியலில்தான் ஒப்பீடு தோன்றுகின்றது. ஆற்றாமை பெருகுகின்றது. யாரோவொருவர் வாழும் வாழ்க்கை தமக்குக் கிடைக்காமல் போனதாய் வருந்துபவர்களுக்குத் தம் வாழ்க்கையும் வேறு யாரோ ஒருவருக்குக் கனவாக அமைந்திருக்குமென்ற எண்ணம் தோன்றாமல் போய்விடுகின்றது.

அண்மையில் எனக்குத் தெரிந்த ஒருவர் முகநூலில் தம் உறவினரின் படங்களைக் காட்டி அவர்கள் மிகவும் மகிழ்வாக இருக்கின்றார்கள், எல்லா இடங்களுக்கும் செல்கின்றார்கள் கடவுள் அவர்கள் வாழ்வை ஆசிர்வதித்துவிட்டுத் தன் வாழ்க்கையை மட்டும் இப்படிக் கவலையிலேயே மூழ்கடித்துவிட்டதாகக் கூறினார். அவர் கூறிய அதே உறவினர்கள் எனக்குத் தெரிந்தவர்கள்.கடன்சுமை, வேலைப் பழுவின் காரணமாக, ஒரு மாற்றத்திற்காகத் தாம் விடுமுறை சென்றதாகவும் கூறியிருந்தார்கள். மேலோட்டமாகப் படங்களைப் பார்ப்பவர்களுக்கு இப்படித்தான் தோன்றும். தம்மை விடப் பிறர் நன்றாக இருப்பதாகவும் தாம் மட்டும்தான் உலகிலுள்ள அத்தனை துன்பங்களையும் அனுபவித்து வாழ்வை இழந்துவிட்டதாக எண்ணிக்கொள்வார்கள்.ஒவ்வொருவரும் தமக்கான வாழ்வின் இடர்களை ஏதோவொரு விதத்தில் மாற்றியமைக்க முனைகின்றார்கள். இது புரியாமல் அடுத்தவன் போல் தம் வாழவில்லையே எனப் பலர் அங்கலாய்த்துக்கொள்கின்றனர்.

வாழ்க்கை என்பது புதிர்களின் கூட்டல். விடை காணத் தெரிந்தவர்கள் அவற்றிலிருந்து இலாகவமாக வெளி வருகின்றனர்.


பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)



விடை காண முயற்சிப்பவர்களும் ஏதோவொரு வகையில் வந்துவிடுகின்றனர். எனக்கு மட்டும் இத்தனை சிக்கலான என எண்ணி எண்ணியே சிக்கல்களைப் பெரிதாக்குபவர்கள்தான் எனக்கு மட்டும்தான் எல்லாத் துன்பங்களுமே எனத் தம் சிக்கல்களைக் கடைவிரிக்கின்றனர். சிக்கல்களைக் கையாளத் தெரிந்தவர்கள் அதற்கான விடைகளை மட்டுமே காட்சிப்படுத்துகின்றனர். வெளியுலகின் கண்களுக்கு அவர்களுக்கு நல்லதே நடப்பதாகக் காட்சிப்படுத்தப்படுகின்றது.

வாழ்க்கையைக் கையாளத் தெரிந்தவர்கள் துன்பங்களிலும் புன்னகைக்கப் பழகிவிடுகிறார்கள்.கையாளத் தெரியாதவர்கள் கேள்விகளோடு துன்பக் கடலில் மூழ்கிப் போகின்றார்கள்.

ஆர்ப்பரித்து மகிழத் துடிக்கும் வாழ்வில் தொடங்கி ஆளரவமற்ற ஒரு பகுதியில் சுருக்கிக்கொள்ளவே கற்றுத் தரும் இந்த "எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கின்றது ?" என்ற கேள்வி.

எல்லோருக்கும் இப்படித்தான் நடக்கின்றது.

அதைக் கையாளப் பழகியவர்கள் தங்கள் நற்பேறுகளை மட்டும் வெளியே காட்டிக்கொள்கின்றார்கள் அல்லது தாம் நன்றாக இருப்பதாகக் கூறி நடித்துக் கொள்கின்றார்கள் அவ்வளவே.

எந்தவொரு ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவங்கள் நம்மைச் சுற்றி நடந்தாலும் உடைந்துவிடாமல் நம்மை அடுத்த தாக்குதலைத் தாங்கும்வண்ணம் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.வாழ்க்கை அத்தனை இலகுவானதல்ல. இந்த உலகத்தில் நாம் ஏதோவொரு காரணத்துக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றோம். நமக்கு நடக்கின்ற அனைத்தும் அதற்கான தயார்படுத்துதலாக இருக்கலாம்.

உடைந்து உடைந்து அதன்பின் உடைந்துபோக எதுவுமேயில்லையெனும் போது பிறக்கும் பக்குவம் எத்தனையோ வெற்றிகளின் முன்னோடியாக அமையும்.

நீங்கள் கேட்கும் இந்தக் கேள்விக்குப் பின்னரான துயரில் நீங்கள் அறியாமலே பல நன்மைகள் ஒளிந்திருக்கலாம். அவற்றின் மூலமான படிப்பினைகள் உங்களைப் புடம் போடலாம்.

கேள்விகளோடு தளர்ந்துவிடாமல் பதில்களாய் செயல்படுங்கள். உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில். துயர்களின் கைகளிள் உங்களைத் தத்துக் கொடுக்காமல் "எனக்காகவே என் நன்மைக்காகவே இப்படி நடக்கிறது" என்று துணிந்து ஏற்கப் பழகுங்கள். உங்களுக்காகவே எல்லாம் நடக்கும். உங்களுக்கான பாதைகள் பிறக்கும்.

NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை
தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
KADHIR
Basmati Rice
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 34

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# தையலை உயர்வுசெய்!

பெண்களின் சக்தி நிலையை நன்கு உணர்ந்தறிந்த கவிஞராக பாரதி போற்றப்படுவதற்குப் பல கவிதைகள் சான்றாகி இருப்பது அனைவரும் அறிந்ததே.

பெண் விடுதலை வேண்டும் என்று வேட்கை கொண்டவர் காவலன் பாரதி. பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் பின் இந்த உலகினில் வாழ்க்கை இல்லை எனப் பெண்ணின் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்தார், அடிமைப்படுத்தப்பட்டு ஆதரவற்று நிற்கும் பெண்களுக்காக கண்ணீர் வடித்தார். தன்னைப் போல் பிறரை மதித்தவர். உயிர்கள் அனைத்தையும் தன் உயிர் என நினைத்தவர். உயிரற்றவற்றையும் தன் இனமாய் எண்ணியவர். பேதமற்ற பாரதிக்கு தன் நாட்டின் பெண்கள் எங்கோ ஒரு பிஜித் தீவில் படும்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தினம் தினம் செத்து மடியும் அப்பெண்களுக்காக இறைவனிடம் மன்றாடுகிறார். பெண்ணென்று சொன்னால் பேய் கூட இரங்குமே , கடவுளே உனக்கு ஏன் இரக்கம் வரவில்லை. ஹே! வீரகாளியே உடனடியாக அவர் படும் துன்பத்தை விடுவிப்பாய் என்று பராசக்திக்கு ஆணை விடுக்கிறார்.

ஆக,தன்முன்இருக்கும்பெண்ணுக்கோ அல்லது தன்னை சூழ்ந்துள்ள பெண்ணுக்கோ அல்லது தனக்காக உதவும் பெண்ணுக்கோ மட்டும் அல்ல, எங்கோ ஒரு பெண்ணிற்கு அவலம் நேர்ந்தாலும் குரல் கொடுக்கும் ஆண்கள் நிறைந்த சமுதாயம் வேண்டும்.

> **“வேடர் வாராத விருந்துத் திருநாளில்,
> பேடைக் குயிலொன்று பெட்புறவோர்
> வான்கிளையில் வீற்றிருந்தே“**

பெண்களை அடக்கித் தன் கட்டுக்குள் வைக்காமல், அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படாமல், அவர்களது திறனைக் கொல்லாமல் விட்டால் எவ்வகையான சிறப்பினை வெளிப்படுத்துவர் என்பதனை இவ்வரிகளினூடு பார்க்கத் தோன்றுகிறது.

பெண்களின் வல்லமையை அடக்கி ஆழாமால் அவர்களைச் சுதந்திரமாக விடும் போது, தமக்கான சிறப்பான இடத்தில் தாமாகவே சென்று அமர்ந்திருப்பர். தமது மிகச் சிறந்த தன்மையை வெளிப்படுத்துவர். அதுமட்டுமா , தம்மை சூழ்ந்தோர் அனைவரையும் இன்பக் கடலில் மூழ்க வைப்பர். அடடா! ஸ்வர்க்க லோகத்தில் இருந்து வந்த தேவதையோ இவள் என்று வியக்கும் வகையில் அவளருகில் இருக்கும் ஆணுக்கும் அமரசுகத்தை காட்டவல்லவள். ஆனால், இவையாவும் சாத்தியமாக அது வேடர் வராத திருநாளாக இருக்க வேண்டும்.

பெண்களை அடக்கி ஆழ்வதை முற்றாக எதிர்த்தவர் பாரதி.

“ வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை குனிந்தார் “ ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டு அறிவு வளர்த்திட பெண்ணின் விடுதலைக்கு வேட்கை கொண்டார் பாரதி.

> **பெண்ணின் காதலைப்
> போற்றியவர் காதலன் பாரதி**
>
> **காதல், காதல், காதல்,
> காதல் போயிற் காதல் போயிற்
> சாதல், சாதல், சாதல்.
> இன்பம், இன்பம், இன்பம்
> இன்பத் திற்கோ ரெல்லை காணில்,
> துன்பம், துன்பம், துன்பம்
> உறுதி, உறுதி, உறுதீ
> உறுதிக் கேயோர் உடைவுண் டாயின்,
> இறுதி, இறுதி, இறுதி.**

பெண்குயில் பாடும் பாடல் வரிகளை பாரதி எப்படி செதுக்கி இருக்கிறார் பாருங்கள். எதனை எவ்வாறு எப்படி சொல்ல வேண்டும் என்ற தெளிவும், நயமும், ரத்தினச்சுருக்கமும் பெண்களின் தன்மை என்பதனை சுட்டிக் காட்டும் விதமாக அட்சரம் அளந்து காணப்படுவதோடு ஆழ் பொருள் தருவதாக இப்பாடல் அமைகிறது. “மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்“

கலி அழித்து, களி கொண்டு வாழ்வ-தற்கு பெண்ணின் காதல் பெருந்துணையாகிறது. பெண்ணின் காதலைப் போற்றிப் பாடினார். பெண்களின் மீது காதல் கொண்டு , பதிலுக்கு அந்தப் பெண்களிடமிருந்து காதல் கிடைக்கப்பெற்ற ஆண்களே தேவலோக பெருஞ்சுக வாழ்வினை கூட சாதாரணம் என்று சொல்லும் உயர் வாழ்வினை அடைந்தவர்கள் என்று மாதர் தம் காதலின் மஹோன்னதம் காட்டி , பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே பெற்றது உன் முகம் அன்றிப் பிறிதொன்று இல்லை என நெடும்



பண்டைக்காலம் முதல் நேர்ந்து வரும் காதலைப் போற்றிப் பாடிய காதலன் பாரதி பெண்களின் பெருங் காதலன்.

> **பெண்ணை தெய்வமெனக்
> கொண்டாடியவர் விண்ணவன் பாரதி.
> “பெண்மை அழகொன்று
> வந்தது கண்முன்பு
> கன்னி வடிவமென்றே – களி
> கண்டு சற்றே அருகில் சென்று
> பார்க்கையில்
> அன்னை வடிவமடா – இவள்
> ஆதி பராசக்தி தேவியடா“**

> **“வயது பதினாறு இருக்கும்
> இளவயது மங்கை
> அழகென்னும் தெய்வம் தான்
> அது என்றே அறிந்தேன்.“**
>
> **மண்ணுக்குள் எவ்வுயிரும்
> தெய்வம் என்றால்
> மனையாளும் தெய்வம் அன்றோ ?
> காதல் செய்யும் மனைவியே
> சக்தி கண்டீர்
> தாய்க்கு மேல் இங்கே
> ஊர் தெய்வம் உண்டோ ?**

ஆக, பெண் எந்த பருவத்தில் இருந்தாலும் தெய்வமாகவே போற்றப்படுகிறாள்.இவ்வாறு ஒரு பெண் தாம் பெண்ணாகப் பிறந்தமைக்கான பெருமையை உணர்த்தியவன் பாரதி.

ஆதலால் தான் பெரும்பாலும் தாம் விரும்பும் ஆணை பாரதியாகவே தரிசிக்கிறார்கள் பெண்கள்.

மானிட வாழ்வில் துன்பக் கடலில் உழன்று தவிக்காமல் இன்ப புரியைக் காட்டித் தந்த பாரதி காலம் முழுவதும் பெண்களின் காதலனாய், காவலனாய், கடவுளாய், யாதுமாகி வாழ்ந்திருப்பார். வாழ்விப்பார்.



# வெற்றிமணி பத்திரிகையின் பங்குனி மாத இதழின் கௌர ஆசிரியராக கௌரவம் பெறும் பன்முகக்கலைஞர் கலாசாதனா நிறுவனர்- நோர்வே

## கவிதா லட்சுமி அவர்களின் படைப்பாற்றல் ஒரு கண்ணோட்டம்



சூர்ப்பணகை நடன நாடகத்தின் ஆரண்ய காண்ட அறிமுகக் காட்சிகள் இவை. சூர்ப்பணகை – இராமன் சந்திப்பிற்கு முன்.

**PC: Sanjayan Selvamanickam**

### கலாநிதி. சர்வேந்திரா தர்மலிங்கம்:



பேராசிரியர் சிவத்தம்பி கூறுவார் – ஆசிரியர் என்பது வேறு. கலைஞர் என்பது வேறு. எம்மிடையே ஆசிரியர்கள் இருக்கும் அளவுக்கு கலைஞர்கள் இல்லை– என்று. கவிதா நல்லதொரு பரத நாட்டிய ஆசிரியராகவும் கலைஞராகவும் இருக்கிறார். எனது அவதானிப்பில் பரதம் பயின்றவர்களில் பரதக்கலையை சமூகத்துடன் இணைத்து ஆய்வுகளைச் செய்பவர்களும் குறைவு. கவிதா இதனைச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர் என்பதனை எழுத்துகளும் சுட்டி நிற்கின்றன.

### கவிஞர் இளவாலை விஜேந்திரன்



எமக்கெல்லாம் சூர்ப்பணகை என்றதும் மனதிற் தோன்றும் படிமம் எதிர்மறையானது. பல தமிழ்ப்படங்களில் வரும் ஹவில்லிஹகளைவிட மோசமானது என்றும் கூறலாம். அதே வேளை ராமன் புனிதனாகவும் ஏகபத்தினி விரதனாயும் உறைந்து விட்ட எண்ணக் கோலங்கள் இவ்வரங்கில் முதன்முறையாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

ஓர் அரங்கில், நாம் முன்னரே அறிந்த விடயங்களை அப்படியே படைப்பதுதான் நடன நிகழ்வுகளாய் நாம் பொதுவாகக் காண்பது. அதிலிருந்து விலகி, சொல்லப்பட்ட விடயங்களைக் கேள்விக்குள்ளாக்குவது எல்லோரும் செய்யும் ஒரு செயலல்ல. கவிதாவிடம் இருக்கும் இலக்கிய அறிவும் தேடலும் ஏற்கனவே உள்ளதை அப்படியே படைப்பது சரியல்ல எனச் சொல்கின்றன.

பொதுவாகப் பரதநாட்டிய நிகழ்வுகள் சொல்லப்பட்ட விடயங்களை அப்படியே பிசிறின்றிச் சொல்வதுஃ செய்வது என்ற ஒரே தடத்திற் பயணிக்கையில் சிலராவது இப்படி மாற்றி யோசிப்பது ரசிகர்களுக்குப் பயன்தருவது.



**வார்த்தைகள்**
எனது
காலக் கயிறறுப்பு
சாஸ்திரக் கட்டவிழ்ப்பு
தொலைதலுக்கான மொழிக்காடு
சுயத்தோடான பொடிநடை
அகம் துறக்கும் மேலாடை
தேடலின் முதற்புள்ளி
தன்னைக் கடக்கும் சிறுமுயற்சி
உணர்வின் உண்மைநிறம்
பிறப்பின் எதிர்வினைவு
முழுநிர்வாணம்

### பேராசிரியர் சண்முகரட்ணம்:

அழகும் அர்த்தங்களும் ததும்பிய அசையும் கவிதைகளும் ஞானரதம் நடன நாடகமும்!

நான் முன்னர் விரும்பி வாசித்த புதுக்கவிதைகள் பாடல்களாக இசையமைக்கப்பட்டு பரதநாட்டியத்தினூடாக உயிர்ப்புடன் அசைவதைக் காண்பதும் கேட்பதும் எனக்கு ஒரு புதிய அனுபவமே. இந்தக் கவிதைகள் பல்வேறு உணர்வுகளையும் செய்திகளையும் தருவன.

இவற்றின் உள்ளடக்கங்கள் இயற்கை, சமூக ஒடுக்குமுறை, சாதிய எதிர்ப்பு, விடுதலை, போராட்டம், பெண்ணுரிமை, காதல், மனித நேயம், துணிவு, தனிமை, எனப் பல அம்சங்களைக் கொண்டன. இத்தகைய கருப்பொருட்களைக் கொண்ட புதுக் கவிதைகளைத் தேர்ந்தெடுத்திருப்பது வரவேற்கப்படவேண்டியது. இவைதரும் செய்திகளை அழகியல்பூர்வமாக வடிவமைக்க பரதநாட்டிய அசைவுகளைப் பயன்படுத்த முடியுமமென்பதையும் செய்து காட்டியிருக்கின்றனர் கவிதா லட்சுமி.

'ஞானரதம்' நடன நாடகம், கனதியான பொறுப்புக்களைக் கொண்ட ஒரு திட்டத்தின் நிறைவேற்றம் எனக் கூறலாம்.

பாரதியின் ஞானரதத்தை நடன நாடகமாகப் பிரதியாக்குவதிலிருந்து அதற்குரிய இசையமைப்பு, நடனங்களின் தேர்வு, நடிகர்களின் பயிற்சி, மேடையமைப்பு எல்லாவற்றையுமே சிறப்பாக ஒருங்கிணைத்து அரங்கேற்றியிருப்பது ஒரு பெருமுயற்சியின் வெற்றி என்பது தெளிவு.

### எழுத்தாளர் ரூபன் சிவராஜா:



கூர்மை, செறிவு, அழகியல், பல்பரிமாணம் கொண்ட கவிதைகள் அவருடையவை. இன்னும் சொல்வதானால் தனிமனித மற்றும் சமூக வாழ்வியக்கத்தின் பல்வேறு அம்சங்களையும் உள்வாங்கிய வாழ்வனுபவப் பிரதிபலிப்புகளை அவருடைய கவிதைகளிற் தரிசிக்கலாம். நடனம் தெரிந்தவர்களுக்கு உடல் நெகிழ்வானதும் இலகுவாக வளையக்கூடியதும் என்பது ஆச்சரியமில்லை. ஆனால் மொழியும் அவர்களுக்கு மிக லாவகமாக வளைந்து கொடுக்கும் அல்லது மொழியை லாவகமாக வளைக்கின்ற பக்குவமும் கலைத்துவ ஆற்றலும் அவர்களுக்கு உண்டு.

காத்திரமாகவும் கூர்மையாகவும் எளிமையாகவும் சுவாரஸ்யமாகவுமென பேசுபொருளுக்கும் இலக்கிய வடிவத் தெரிவுக்குமேற்ற வகையில் மொழியைக் கையாள்வதிலும் கவிதாவின் ஆளுமையை அவரது எழுத்துகளில் தரிசிக்கலாம்.

கவிதாவின் கவிதைகள், கட்டுரைகள், நடன நாடகப் படைப்புகள் கருத்தியல் ரீதியாகப் பல கட்டுடைப்புகளைச் செய்துள்ளன. சமூகம் கட்டமைத்து வைத்திருக்கின்ற ஒழுங்குகளை மீறுவது, அவற்றின் மறுபக்கத்தைப் பார்ப்பது – அவற்றின் மீது கேள்விகளை எழுப்புவது – அதிகாரம் சார்ந்த ஒடுக்குமுறை சார்ந்த அதன் கூறுகளை, கேள்விக்குட்படுத்துவது – பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை கட்டுடைப்பது என்பதாக இவரது படைப்புகளின் கருத்தியல் சார்ந்த விடயங்களை மதிப்பிடலாம்.

நோர்வேஜிய மற்றும் உலக இலக்கியங்கள் மீதான வாசிப்பும் மொழிபெயர்ப்பு அனுபவங்களும் இன்னுமொரு வகையாக அவரின் எழுத்துளுக்கு செழுமைக்கு சேர்க்கின்றன.



# தாயகத்தில் பெண்கள் வணிக உலகில் நிலைத்து நிற்க செழிக்க புலம்பெயர்ந்தோர் தங்களுடைய நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்தல் வேண்டும்



சர்வதேச மகளிர் தினத்தில் பெண் தொழில்முனைவோருக்கான ஆற்றலை மேம்படுத்துதல் அவசியம். இலங்கையில் நிலவும் வணிகச் சூழலின் ஆற்றல்மிக்க கட்டமைப்பிற்குள் பல பெண் தொழில்முனைவோர் புதுமைகளை படைத்து பொருளாதார விரிவாக்கத்தைத் தூண்டி மாற்றத்தின் ஆற்றல்மிக்க முகவர்களாக மாறி வருகின்றனர். சர்வதேச மகளிர் தினம் பாலின சமத்துவத்துக்காக நடந்து வரும் போராட்டத்தையும், உலகெங்கிலும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் அவசியத்தையும் நினைவூட்டுகிறது. பல ஆண்டுகளாக இலங்கையில் பாலின சமத்துவத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், கலாசார நியமங்கள் மற்றும் பாரம்பரிய பாலின பாத்திரங்கள் வணிகத்தில் தொழிலைத் தொடர விரும்பும் பெண்களுக்கு தடையாக இருந்து வருகின்றன. சமுதாயத்தில் ஊறியுள்ள ஒரே மாதிரியான கருத்துக்களை உடைத்து பல தடைகள் இருந்தபோதிலும் அவற்றினை எதிர்கொண்டு ஒரு சிறப்பான வணிக சூழலை உருவாக்கி கொண்டு வருகின்றனர் இன்றைய பெண்கள். பெண் தொழில்முனைவோர்களின் இந்த புதிய பாதையானது தடைகளை எதிர்கொண்டு பாரபட்சங்களை உடைத்து வெற்றிக்கு வழி வகுக்கிறது.

இலங்கையில் புதுமைகளை படைத்தல், பொருளாதார வளர்ச்சியை தூண்டுதல் மற்றும் வர்த்தக அமைப்பை மறுசீரமைத்தல் போன்றவற்றில் ஈடுபடும் பெண் தொழில்முனைவோரின் சாதனைகளை நாம் கொண்டாடும் போது இந்த நாள் குறிப்பிட்ட முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. பெண்களிடம் உறுதிப்பாடு மற்றும் மன உறுதி இருந்தபோதிலும் இலங்கையில் உள்ள பல பெண் தொழில்முனைவோர், நிதி, வளங்கள் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் உட்பட பலமான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை நாம் நினைவுகூரும்போது, தாயகத்தில் உள்ள பெண் தொழில்முனைவோரை ஆதரிப்பதற்கும் அவர்களை மேம்படுத்துவதற்கும் புலம்பெயர்ந்த இலங்கையர்களின் கூட்டு சக்தியைப் பயன்படுத்துவது அவசியம். சங்ககால மகளிர் தொழில்முனைவோராக வெற்றி கண்டனர் என்பதனையும் மனதில் நிறுத்தவேண்டும்.

இலங்கையில் பல ஆர்வமுள்ள பெண் தொழில்முனைவோர் நிதியுதவி பெறுவதில் கணிசமான சவால்களை தொடர்ந்து எதிர்கொள்கின்றனர். நிதியியல் துறையில் வேரூன்றிய பாலின சார்பு காரணமாக, பெண்கள் தங்கள் திறன் மற்றும் நிரூபிக்கப்பட்ட செயல்திறன் இருந்தபோதிலும், நிதி பெறுவதில் அடிக்கடி தடைகளை எதிர்கொள்கின்றனர். பெண் தொழில்முனைவோரை வலுப்படுத்தவும், மூலதன அணுகலில் பாலின இடைவெளியை குறைக்கவும், இலங்கையின் மகளிர் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் போன்ற நிறுவனங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நிறைய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சமூக வலையமைப்பு வாய்ப்புகள், வழிகாட்டுதல் மற்றும் நிதி முகாமைத்துவ கல்வியறிவு திட்டங்களை வழங்குவதன் மூலம் அவர்கள் இதைச் செய்கிறார்கள்.

பெண் தொழில்முனைவோரின் முழு திறனையும் உணர்ந்துகொள்வதற்கு, பெண் திறமைகளை ஆதரிக்கும் மற்றும் குழுப்பணியை ஊக்குவிக்கும் நேர்மறையான சூழலை வளர்ப்பது அவசியம். புலம்பெயர்ந்தோர், பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவளிக்கும் மிகவும் முக்கியமான வழிகளில் ஒன்று நிதி முதலீடு ஆகும். மூலதனம் அல்லது நுண் நிதி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், புலம்பெயர் முதலீட்டாளர்கள் பல பெண் தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் நிதி இடைவெளியைக் குறைக்க முன்வரலாம். மேலும், புலம்பெயர் முதலீட்டாளர்கள் பெண் தொழில்முனைவோர் தங்கள் வணிகங்களைத் தொடங்குதல் மற்றும் அதன் நீண்டகால வளர்ச்சியை வலுப்படுத்தல் ஆகியவற்றில் உள்ள சிக்கல்களை வெற்றிபெறத் தேவையான திறன்கள், அறிவு மற்றும் வளங்களுடன் வலுவூட்டும் திறன்-கட்டமைப்பு முயற்சிகளை ஆதரித்தல். வணிக மேம்பாடு, நிதி மேலாண்மை மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் போன்ற பகுதிகளில் கவனம் செலுத்தும் பயிற்சி திட்டங்கள் மற்றும் வழிகாட்டல் முயற்சிகளை ஒழுங்கமைத்தல், புலம்பெயர் உறுப்பினர்கள் தங்களுடைய நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்தல் மூலம், பெண் தொழில்முனைவோருக்கு தடைகளைத் தாண்டி அவர்களின் முழுத் திறனையும் வெளிப்படுத்த உதவ முடியும்.

புலம்பெயர்ந்தோர் உலக அரங்கில் இலங்கை பெண் தொழில்முனைவோருக்கு தூதுவர்களாகவும் வக்கீல்களாகவும் பணியாற்ற முடியும். தங்கள் இணைப்புக்கள் மற்றும் செல்வாக்கை மேம்படுத்துவதன் மூலம், புலம்பெயர் உறுப்பினர்கள் பெண் தொழில்முனைவோரின் குரல்களை ஓங்கி ஒலிக்க செய்து, அவர்களின் புதிய யோசனைகள் மற்றும் முயற்சிகளை வெளிப்படுத்தலாம். இதன் மூலம் சர்வதேச கூட்டாண்மை மற்றும் வாய்ப்புகளை ஈர்க்க முடியும். இந்த திறன்சார் வெளிப்பாடு பெண் தொழில்முனைவோரின் சுய ஆளுமையை உயர்த்துவது மட்டுமல்லாமல், புதிய சந்தைகள், ஒத்துழைப்புகள் மற்றும் முதலீடுகளுக்கான கதவுகளைத் திறக்கிறது.



பவதாரணி
ரவீந்திரன்
(நல்லூர்)

புலம்பெயர்ந்தோர் மற்றும் உள்ளூர் அமைப்புகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு, வணிக உலகில் தாக்கத்தை அதிகரிப்பதற்கும் நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் முக்கியமாகும். உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில் சங்கங்களுடன் கூட்டு சேர்ந்து, புலம்பெயர்ந்தோர் பெண்களின் தொழில் முனைவோர் முன்னேற்றம், பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் மேலும் உள்ளடக்கிய வணிகச் சூழலை உருவாக்கும் முயற்சிகளை ஆதரிக்கும் ஒருங்கிணைவானது, பெண் தொழில்முனைவோர் வளர்ச்சியடைவதற்கான அர்த்தமுள்ள வாய்ப்புகளை உருவாக்க உதவுகிறது.

28 ஆம் பக்கம் பார்க்க...



# காட்டாற்றுக்கு ஜி.பி.எஸ் தேவையில்லை

## வாழ்க்கை என்பது இன்னொருவர் இடுகின்ற பாதையில் நடப்பதல்ல, நமக்கான பாதையை உருவாக்கி நடப்பது!




சேவியர்
(தமிழ்நாடு)

பெண்கள் பிரபஞ்சத்தின் மையம் ! பெண்கள் உறவுகளின் மையம்! பெண்கள் மாற்றத்தின் மையம்! பெண்கள் இல்லையேல் பூமி இல்லை, வளர்ச்சி இல்லை, மனுக்குலம் இல்லை! சரி, எல்லாமே பெண்களால் இருக்கிறது! பெண்களுக்கு எல்லாம் இருக்கிறதா ? அன்றைய ஆணாதிக்கச் சமூகத்தின் நீட்சி இன்றைக்கும் நிலவுகிறதா ? அல்லது பெண்கள் தங்களுக்கான சுதந்திர வீதிகளில் தான் பறந்து திரிகிறார்களா ?

பழைய காலங்களில் ஆணாதிக்கம் கோலோச்சியது. பெண்கள் அடிமைகளாய் இருந்தார்கள். ஆண்கள் அவர்களை அடக்கி ஆண்டார்கள். பெண்களுக்கென உரிமைகள் இருக்கவில்லை. இப்படியெல்லாம் நீட்டி முழக்கும் பல செய்திகளை நாம் வாசித்திருப்போம். அவையெல்லாம் பிற இன மக்களுக்கு வேண்டுமானால் சரியானதாய் இருக்கலாம். ஆனால் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாழ்ந்த மூத்த குடியான தமிழ் இனத்தின் வரலாறு அப்படி இல்லை ! தமிழ்ப் பெண்கள் வரலாற்றின் தொடக்கத்திலேயே வரலாற்றுப் பெண்மணிகளாகத் தான் உலவிக் கொண்டிருந்தார்களே தவிர, அடிமைகளாய் இருக்கவில்லை. ஆண்களுக்கு இணையான வீரம் அவர்களிடம் இருந்தது. முறத்தால் புலி விரட்டிய கதையை நாம் எத்தனையோ ஆயிரம் முறை கேட்டிருப்போம். புலியை எதிர்த்து நிற்கின்ற துணிச்சல் ஒரு புறம். அதை விரட்ட எனக்கொரு முறமே போதும் என்கின்ற தன்னம்பிக்கையின் உச்சம் மறுபுறம். நினைத்தாலே சிலிர்க்க வைக்கின்ற வீரம் அன்றைக்கு பெண்களிடம் இருந்தது. இன்றைக்கு கையில் ஒரு துப்பாக்கி இருந்தால் கூட புலியை நெருங்கும் துணிச்சல் நமக்கு வருமா ? எவ்வளவு தான் வலிமையான புஜ பாராக்கிரம சாலியானால் கூட வருமா ? இல்லை என அடித்துச் சொல்லலாம் !

வீரத்தைப் போலவே செல்வமும் அன்றைய தமிழ் தேசத்தில் அபரிமிதமாகவே இருந்தது. தானியத்தைக் கொத்த வருகின்ற பறவையை நோக்கி ஒரு பத்து ரூபா நாணயத்தை நாம் விட்டெறிய மாட்டோம். ஆனால் காதில் இருந்த காதணியையே கழற்றி பறவையை நோக்கி எறிகின்ற சங்க கால செல்வச் செழிப்பு வியப்பு. அந்த செல்வத்தைக் கையாள்கின்ற உரிமையும், திறமையும் பெண்களிடம் இருந்தது என்பது எவ்வளவு பெருமைக்குரிய விஷயம் !

கல்வியிலும் பெண்கள் சிறந்து விளங்கியிருந்தார்கள். கல்வியில் சிறந்து விளங்கி பல செழுமையான இலக்கியங்களையும் படைத்திருக்கிறார்கள். இயல், இசை, கூத்து போன்றவற்றில் அவர்கள் கொடிகட்டிப் பறந்தார்கள். சங்க இலக்கியங்களில் நாற்பத்து இரண்டு பெண்பாற் புலவர்கள் பாடல்கள் இசைத்திருக்கின்றனர். அவர்களில் ஔவையார், காக்கைப்பாடினியார், வெள்ளி வீதியார் போன்ற பெயர்களெல்லாம் இன்னும் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டே தான் இருக்கிறது.

உலகத்தின் மற்ற எல்லா நாகரீகங்களும் பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளியிருந்த காலத்தில், தமிழ் சமூகம் அவர்களைத் தோளில் சுமந்து அழகு பார்த்திருக்கிறது. பெண்கள் அரசியல் ஆளுமைகளாகவும் இருந்திருக்கிறார்கள். அரசவைகளில் நுழையவும் மன்னனுக்கு அறிவுரைகள் வழங்கவும். உயர் அதிகாரிகளுடன் நட்பு பாராட்டவும், அவர்களுக்கு ஆலோசனை சொல்லவும் பெண்கள் பலர் அன்றைக்கு இருந்தனர். தொண்டைமான் அதியமானுக்கு எதிராகப் போர் தொடுக்கத் தயாரானபோது அங்கே தூதுவராய்ச் சென்று ஒரு மாபெரும் போரை தனது இலக்கியப் புலமையினாலும், ஞானத்தினாலும் தடுத்து நிறுத்திய ஔவையாரின் கதை அவற்றில் ஒன்று ! பெண்கள் வீட்டை ஆளவேண்டும், ஆண்கள் நாட்டை ஆளவேண்டும் எனும் கோட்பாடுகளெல்லாம் அப்போது இல்லை. அதியமான் மன்னனே ஔவையை அழைத்து தூது அனுப்புகிறான். அந்த அளவுக்கு பெண்கள் மேலான இடத்திலே இருந்தார்கள்.



வீடுகளிலும் பெண்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினார்கள். வீடு தேடி வருகின்றவர்கள் பகைவர்களாகவே இருந்தால் கூட அவர்களை சிறப்பாக வரவேற்கும் பண்புடையவர்களாக இருந்தார்கள். தினையறுத்து, மானிறைச்சியோடு

17 ஆம் பக்கம் பார்க்க...






# காட்டாற்றுக்கு ஜி.பி.எஸ் தேவையில்லை

சமைத்து விருந்தினருக்கு வழங்கிய சிறப்புப் பண்புகள் சங்க இலக்கியங்களில் உண்டு.

குடும்பத்தைக் கட்டியெழுப்புவதும், காதல் வாழ்க்கை வாழ்வதிலும் சங்க காலப் பெண்களுக்கு ஈடு இணை இல்லை எனலாம். தனக்குக் கணவனாக வரப் போகின்றவன் அழகாய் இருக்க வேண்டும், நீளமான மீசை வைக்க வேண்டும், பணம் இருக்க வேண்டும் என்றெல்லாம் அன்றைய பெண்கள் ஆசைப்படவில்லை. அவன் வீரனாக இருக்க வேண்டும், கற்பு நெறி பிறழாதவனாக இருக்க வேண்டும், அறத்தின் பால் வாழ்பவனாக இருக்க வேண்டும் என்றே ஆசித்தார்கள். காதலாகிக் கருந்துருகுவதும், கணவனை அன்பின் உயரிடத்தில் வைத்து மதிப்பதும் நேசிப்பதுமாக இருந்தார்கள். கற்பு நெறி தவறாதவர்களாகவும், ஒழுக்க நிலை விலகாதவர்களாகவும் இருந்தார்கள். தாயானபின் தனது மகன் வீரனாகவும், அறநெறி உடையவனாகவும், கல்வி கற்றவனாகவும் இருக்க வேண்டும் என விரும்பினார்கள். இப்படிப் பண்டைய தமிழ்ப் பெண்கள் உலக வரலாற்றுக்கே பாடம் எடுக்கிறார்கள்.

அதே நேரத்தில் சங்க காலத்தில் பரத்தமைப் பெண்களும் இருந்தார்கள். போர்களின் காரணத்தால் அடிமை நிலைக்கு ஆளானவர்கள் பரத்தமைக்குச் சென்றதுண்டு. அல்லது தாங்களாகவே விரும்பியும் அவர்கள் அந்த நிலையை அடைந்ததுண்டு. பரத்தமை கூட ஒருவித ஒழுக்கத்தோடு நடந்த காலம் அது என்பது வியக்க வைக்கிறது. அவர்களை உரிமை மகளிர் என்றும் சங்ககாலம் அழைத்தது.



இப்படி நீட்டி முழக்குவதற்குக் காரணம் நமது தமிழ் சமூகத்தின் பெண்மை என்பது ஆதிகாலம் தொட்டே சமூகத்தின் மையமாகத் தான் இருந்தது, சுதந்திரமாக, சமத்துவமாக, ஒத்திசைவாக வாழ்ந்தது என்பதைச் சொல்வதற்குத் தான். எனவே, ஏதோ பெண்கள் அடிமைகளாக இருந்தார்கள். நாங்க தான் அவங்களை வேலைக்கு அனுப்பி வைக்கிறோம். நாங்க தான் அவங்க ஜீன்ஸ் போட அனுமதிக்கிறோம். அவர்களுக்கான உரிமையைக் கொடுக்கிறோம் என ஆண்கள் பிதற்றாமல் இருக்கக் கடவர்கள்.

சங்க காலத்தில் ஆணாதிக்கக் கூறுகள் இல்லாமல் இல்லை, ஆனால் பெண்ணியத்தின் உயரிய விழுமியங்கள் அன்றைக்கு கணிசமாகவே இருந்தன. காலமாற்றம் தமிழ் சமூகத்திற்குள் ஏற்படுத்திய மாற்றங்கள் பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளியது. அது பெண்கள் மட்டுமல்ல, தமிழ்ச் சமூக ஆண்களுமே அத்தகைய அலைக்கழிப்புக்கு ஆளானார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்த பெண்கள் தினத்தில் நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவர்களை பழைய தமிழ்ச் சமூக மரபுகளுக்குள் அழைத்துச் செல்ல உதவுவது மட்டும் தான். காலம் காலமாக கூண்டில் அடைபட்ட புலியானது




கானகத்தை மறந்து விடுகிறது. காலம் காலமாய் கூட்டில் பறக்கும் கிளி வானத்தை எட்டிப் பார்க்க அச்சப்படுகிறது. காலம் காலமாய் அடக்குமுறைக்? கதைகளுக்குள் வளர்க்கப்படும் பெண் சமூகம் தங்களுடைய உண்மை இயல்பை மறந்து விடுகிறது.

பெண்களை அவர்களுடைய இயல்புகளுடன் வாழவிட்டாலே போதும். தங்களுக்கான சுதந்திரத்தை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். காட்டாற்றுக்கு ஜி.பி.எஸ் தேவையில்லை. காற்றுக்கு கூகிள் மேப் தேவையில்லை. அதனதன் இயல்பை அறிந்து அவர்களை அனுமதித்தாலே போதுமானது.

இந்த பெண்கள் தினத்தின் என் அன்பு சகோதரிகளை வாழ்த்துகிறேன். உங்களிடம் இருப்பது பல்லாயிரம் ஆண்டுகளாய் தொடர்ந்து வருகின்ற சமத்துவச் சிறகு ! அந்த சிறகை விரித்து சமூகத்தில் மேலெழும்புங்கள். முறத்தால் எதிரியையும், அறத்தால் மனுக்குலத்தையும் சந்தியுங்கள். வாழ்க்கை என்பது இன்னொருவர் இடுகின்ற பாதையில் நடப்பதல்ல, நமக்கான பாதையை உருவாக்கி நடப்பது !

முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில் முதலில் பின்னோக்கிச் செல்லுங்கள். சங்கப் பெண்களின் உயரிய பண்புகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.

அதையே கரம்பிடித்து வாழ்வில் வெல்லுங்கள்.

**அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள்.**

---



# திருமணமாகாத பெண்கள் ஜீன்ஸ் அணிய மற்றும் செல்போன் பயன்படுத்தத் தடை

இந்தியாவில் உத்திரப்பிரதேச மாநிலம் முசாபர்நகர் பகுதியில் உள்ள முஸ்லீம்கள் அதிகம் வசிக்கும் கிராம பஞ்சாயத்து ஒன்று, திருமணமாகாத பெண்கள் ஜீன்ஸ் அணிய மற்றும் செல்போன் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது.

முசாபர்நகர் மற்றும் சஹாரான்பூர் ஆகிய 2 மாவட்டங்களில்,முஸ்லீம்கள் அதிகம் வசிக்கும் 10 கிராமங்களில் 'திக்தாத்' எனப்படும் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தி நடைமுறையில் இருக்குமானால் வருந்தத்தக்கது.





# யேர்மனியில் நகுலா சிவநாதனின் விருத்தமழை நூல் வெளியீடு










04.02.2024 அன்று யேர்மனி டோட்முண்ட் நகரில் விருத்தமழையின் வெளியீடு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்துடன் இவ்வெளியீடு அரங்கம் கண்டது. மாணவ இளையோர்களை முன்னிறுத்தி இவ்விழா சிறப்பாக ஆரம்பமானது. விருத்தமழையின் திறனாய்வை கவிவாணன் இரா.சம்பந்தன் அவர்கள் ஆற்றினார்.

இளையோர்களின் கவிபார்வையும் இந்நூலுக்கு கிடைத்தது. டோட்முண்ட் தமிழாலய 11 ஆண்டு மாணவிகள் இதைச் செய்திருந்தார்கள். நூலினைப் பலரும் பாராட்டி வாழ்த்திப் பேசினர்.







நூல் ஆசிரியர் நகுலா சிவநாதனைப் பற்றி மண்சஞ்சிகை ஆசிரியர் வ.சிவராசா அவர்கள் சிறப்பாக நூலாசிரியர் திறன்கள் பற்றிப் பேசினார். சிறப்புரையை தமிழர் அரங்க நிறுவனர் திரு சபேசன் அவர்கள் நூலின் கருத்தும் ஆசிரியரின் திறமைகளையும் எடுத்துரைத்தார் வாழ்த்துரைகளை டோட்முண்ட்தமிழாலய நிர்வாகி திரு திருக்குமார், ஏலையா முருகதாசன்,திரு. அன்னராசா,திரு.மணியம்,ஊடகவியலாளர் முல்லை.மோகன் ஆகியோர்ஆற்றினர். வெளியீட்டு உரையை ஆசிரியர் வ.மனோகரன் அவர்களும்,சிறப்புவிருந்தினர் உரையை மருத்துவர் சதுர்சா அவர்களும் ஆற்றினார். முதற்பிரதியை Orientalische Textil உரிமையாளர் ஜெகதீஸ்வரன் அவர்களும் இரண்டாவது பிரதியை வுவுளு உரிமையாளர் திரு தவம் அவர்களும் மூன்றாம் பிரதியை பொறியலாளர் திரு சிவகுருநாதன் அவர்களும் பெற்றுக் கொண்டனர். மாணர்களின் வாழ்த்தோடு விழா இனிது நிறைவு பெற்றது. நிகழ்வுகளை அழகாகத் தொகுத்து செல்வி ஷறீகா சிவநாதன் வழங்கினார்.

AKSHAYAM Event Catering

AKSHAYAM

உங்கள் மங்கலகரமான வைபவங்கள் எதுவாக இருந்தாலும் நாம் உங்களுக்கு தரமான உணவுகளை அறுசுவை குன்றாது தரக்காத்திருக்கின்றோம்.

பிறந்தநாள் கொண்டாட்டம், திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா, கலைவிழாக்கள்

எதுவானாலும் சுவையான உணவுக்கு எம்மை அழையுங்கள்.



அறுசுவை உணவு தயார்

+49 157 54668021 | Akshayam Event Catering |
WhatsApp +49 157 54668021 | Bochum.Germany

சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)



# மனித இனத்தின் எதிர்காலம் ஏன் விண்வெளி ஆய்வில்

**பூமி** வெப்ப மயமாதல் முதல் தொற்றுநோய்கள் வரை அந்நிய சவால்களை எதிர்கொள்ளும் இந்தக் காலகட்டத்தில், விண்வெளி ஆய்வில் ஏன் நாம் ஆர்வம் கொள்ள வேண்டும்? என்கின்ற கேள்வி எழுகிறது. ஒவ்வொரு ஆண்டும், நம் சொந்த கிரகத்தில் மனிதக் குலத்தின் நிலைமை மேலும் மேலும் மோசமாகிறது. ஆனால், இவ்வாறான பிரச்சனையை எவ்வாறு எதிர்கொள்கிறது? இதற்காகிய தீர்வை நாம் எங்கே காணலாம்? அந்தத் தீர்வு நம் வளிமண்டலத்தின் எல்லைக்கு அப்பால் உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். விண்வெளி ஆய்வு என்பது மனித ஆர்வத்தின் சான்று மட்டுமல்ல, நம் வாழ்வாதாரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமான ஒன்றாகும். விண்வெளி ஆய்வு ஏன் இப்போது எப்போதையும் விட முக்கியமானது என்பதற்கான ஐந்து காரணங்களைப் பார்ப்போம்.

### 1. வாழ்க்கையை மாற்றும் புதுமைகள்

முதலில், விண்வெளி ஆய்வு என்பது புதுமைத்திறனின் மையமாகும். இன்று நாம் சாதாரணமாகக் கருதும் பல தொழில்நுட்பங்கள் விண்வெளித் திட்டங்களிலிருந்து உருவானவை என்று சொன்னால் நம்புவீர்களா? ஜி.பி.எஸ் (GPS), இது Navigation என்று உங்கள் வாகனங்களில் உள்ள வழிகாட்டிக்குத் தேவையானது தொடக்கம் துல்லியமான வானிலை முன்னறிவிப்பு, சோலார் பேனல்கள் வரை இவை அனைத்தும் இல்லாத உலகத்தை கற்பனை செய்யக் கூட முடியாது. இவையெல்லாம் விண்வெளி தொழில்நுட்பம் நமது அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதற்கான உதாரணங்கள் மட்டுமே. மேலும், விண்வெளியின்



தனித்துவமான சூழ்நிலையில் மேற்கொள்ளப்படும் மருத்துவ ஆராய்ச்சி, சுகாதாரத்தைப் புரட்சிகரமாக மாற்றவும், புதிய சிகிச்சைகளை வழங்கவும், மனித ஆயுளை நீடிக்கவும் வழிவகுக்கும் திறன் கொண்டது. உங்கள் வாழ்க்கையை மாற்றும் அடுத்த புதுமை ஸ்ட்ராட்டோஸ்பியருக்கு மேலே இருந்து வரக்கூடும்!

### 2. விண்வெளித் தாக்குதல்களில் இருந்து தப்பித்தல்

இந்தப் பிரபஞ்சம் அழகானது ஆனால் மிகவும் ஆபத்தான இடமும் கூட. பூமியின் வரலாறு பேரழிவான சிறுகோள் தாக்குதல்களால் நிரம்பியுள்ளது. அடுத்த இவ்வாறான ஒரு சிறுகோள் தாக்குதல் நடக்குமா என்பது கேள்வி அல்ல, ஏனென்றால் அது உறுதியாக நடக்கும், எனவே அடுத்த தாக்குதல் எப்போது நடக்கும் என்பதுதான் உண்மையான கேள்வி ஆகும். விண்வெளி ஆய்வு அத்தகைய பேரழிவுகளைத் தடுக்க நமக்கு ஒரு போராடும் வாய்ப்பை அளிக்கிறது. ஹயாபுசா2 (Hayabusa2) மற்றும் OSIRIS REx ஆகிய விண்வெளிப் பணிகளூடாக சிறுகோள்களை நோக்கிச் செய்யப் பட்ட பயணங்கள் மற்றும் நாசாவின் DART பணி போன்ற சிறுகோள் திசை திருப்பு தொழில்நுட்பத்தின் சோதனைகள், மனித இனத்தை விண்வெளி அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்கான வழிவகுத்து வருகின்றன.

நம் இனத்தின் உயிர்வாழ்வு ஒரு கொடிய சிறுகோளைத் திசை திருப்பும் நம் திறனைப் பொறுத்தே இருக்கலாம்.

### 3. இறுதி காப்பு திட்டம்

பூமியில் 8 பில்லியன் மக்கள் வசிக்கும் நிலையில், உலகளாவிய பேரழிவு நம்இனத்தை ஒழித்துக்கட்டும் அபாயம் தொலைதூரமானதாக இல்லை. மற்ற கிரகங்கள் அல்லது துணைக்கோள்களில் குடியேற்றம் செய்வது என்பது நமது மனிதக்குலத்தை அழிவிலிருந்து காக்க உதவும் ஒரு வழியாகக் கருதப்படுகிறது.

பூமி வாழத்தகுதியற்றதாக மாறிவிட்டால் செவ்வாய் அல்லது ஏதாவது ஒரு துணைக் கோளில் குடியேற்றங்களை நிறுவுவது நம் இனத்தின் உயிர் வாழ்வை உறுதிப்படுத்தும். இது அறிவியல் புனைக்கதை போல் தோன்றலாம், ஆனால் இதைச் சாத்தியமாக்கும் தொழில்நுட்பம் இப்போதே உருவாக்கப்பட்டு வருகிறது. மனித இனத்தின் எதிர்காலம் விண்வெளியில் உள்ள வேறொரு கோளில் இருக்கலாம்!



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

### 4. விண்வெளியில் தங்கச் சுரங்கம்

பூமியின் வளங்கள் குறைவாக உள்ளன, நம் சனத்தொகை தொடர்ந்து அதிகரித்து வரும்போது, இந்த வளங்களின் மீதான அழுத்தமும் அதிகரித்து வருகிறது. விண்வெளி கனிமச் சுரங்கம் இந்த பிரச்சனைக்குக் கிட்டத்தட்ட அசாதாரண தீர்வை வழங்குகிறது. சிறுகோள்கள் ஏராளமான விலைமதிப்புமிக்க உலோகங்கள் மற்றும் தாதுகளைக் கொண்டுள்ளன. பூமியின் வள தட்டுப்பாட்டிற்குத் தீர்வு வழங்கும் வகையில் இந்த வளங்களைச்

28 ஆம் பக்கம் பார்க்க...


## வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 29 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக் கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு பெற்றோர்:
4915774318528



மணமகன் தேவை!

Wirtschaftsingenieur
படித்த நற்குணமுள்ள 35 வயதுடைய சைவ வேளாளர் குல பெண்ணுக்கு தற்போதய இடத்தில் வேலையை தொடரக்கூடிய பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு பெற்றோர்:
4915774318528
யேர்மனியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.



# வைகல் - ஆசிரியர் கரிணி வெளியீடு: வெற்றிமணி 28




வைகல் நூல் பற்றிய ஒரு சிறிய அறிமுகம் அல்லது எனது வாசிப்புப் பகிர்வு எனப்படுகின்ற இச்சின்னஞ் சிறிய கட்டுரையில் பேசப்பட வேண்டிய பல விடயங்கள் என் மனதைத் தொட்டுச் செல்கின்றன. அவற்றிற்கு வடிவம் கொடுக்கும் ஒரு சிறு முயற்சி இது.

வைகல் எனும் சொல்லிற்கு, காலை, விடிகாலை, அன்றாடம், தினசரி என்றெல்லாம் அர்த்தம் கொள்ளலாம் என்னும் போது,அது இந்நூலிற்கும் சாலப் பொருந்தி வருகிறது. ஏனெனில் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகள் அனைத்துமே ஒருவர் தனது நாளாந்தத் தேவைகளை எதற்காக, எவ்வாறு மரபு ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

"வைகல் " ஜேர்மனியில், வெற்றிமணி பத்திரிகையின் 28வது வெளியீடாக புரட்டாதி 2023இல் வெளிவந்திருக்கிறது என்பதோடு இதன் அட்டை வடிவமைப்பும், ஓவியமும் வெற்றிமணி ஆசிரியர் திரு மு.க.சு.சிவகுமாரனால் உருவாக்கப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. மூத்தோர் சொல்லும் முதிர்

## பூங்கோதை (இங்கிலாந்து)

நெல்லிக்கனியும் என்கின்ற முதலாவது கட்டுரையிலிருந்து பகிர்ந்துண்டு வாழாத வாழ்வென்ன வாழ்வோ என்கின்ற 31 வது கட்டுரை வரை கரிணி தன்னுடைய பார்வையில் வாழ்வையும் அதன் போக்குகளையும் அது சார்ந்த எம்முன்னோர்களின் நெறிகளையும், எதற்காக அவை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்கின்ற அவரது அபிப்பிராயமும் அழகிய தமிழில் கோர்வையாக் கப்பட்டுள்ளது. இதில் எனக்குப் பிடித்த பல கட்டுரைகள் இருந்தாலும், குறிப்பாக ஒரு சில மிகப் பிடித்தவற்றைக் குறிப்பிட்டு ஏனையவற்றை வாசகர்களின் பார்வைக்கு விட்டு விடுகிறேன்.

"சிரிப்பின் மகத்துவம்" (12 வது கட்டுரை) என்பது அனைவரும் பின்பற்ற வேண்டியதொன்றாகவே நானும் கருதுகின்றேன். என்னுடைய தற்காலப் பின்னணியில், நான் கடந்து வந்த கடின மான பாதைகளை இலகுவாக்கித் தந்தது எனக்கான நகைச்சுவை உணர்வுதான் என்றே நம்புகிறேன். ஆனால் இங்கே இக்கட்டுரை ஆசிரியருக்கும் எனக்குமான ஒரு கருத்து வேறுபாடு என்னவெனில், இவர் இதை ஒரு ஆன்மீக ரீதியாக மட்டுமே நோக்குவதும் நாம் அதைத் தனியே விஞ்ஞான ரீதியாகவும் பார்க்கலாம் என்பதுவுமே ஆகும். தனியே மதம் சார்ந்து கூறப்படுகின்ற விடயங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று விடக்கூடும்.

இங்கு ஆசிரியர் பேசிச் செல்லும் விடயங்கள் அனைத்துமே ஒருவர் தன் வாழ்வில் கடைப்பிடித்து, அதன்பால் ஏற்படுகின்ற நன்மைகள் குறித்தவையே. ஆனால் அவர் அதற்கான விளக்கங்களைத் தருகின்ற போது பகுத்தறிவுச் சிந்தனைகளை ஆன்மீகச் சிந்தனைகளோடு இணைத்துச் செல்கிறார். உதாரணமாக, பெண்கள் தமது மாதவிடாய்க் காலங்களில் எதற்காக ஓய்வு எடுத்துக் கொள்வதும், தம்மீது அதிக கவனம் எடுத்துக் கொள்வதும் அவசியம் என்பதை மிக அழகாகத் தன் கருத்தோடு தொட்டுச் செல்கிறார்."மலரினும் மெலியது புயலினும் வலியது பெண்மை." என்கின்ற இவரது கூற்று ஆழமானதும் விசாலமானதுமாகும்.

கரிணி ஏலவே கூறியிருப்பது போல புதிய பார்வைகள் அனைத்துமே ஒரு இடைச்செருகல் என்பதை அவர் குறிப்பிட்டு நிற்கிறார். பார்வைகள் பலவிதமாகலாம். இவை ஆய்வுக்கட்டுரைகள் அல்ல என்பதையும் இங்கே தரப்பட்டுள்ள அனைத்துக் கட்டுரைகளும் ஆசிரியருடைய அபிப்பிராயம் அல்லது கருத்து என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பகிர்ந்துண்டு வாழ்வதும், இயற்கையோடு இயைந்து வாழ்வதும் தான் மனித குலத்தை மேம்படுத்தும் என்பதில் கரிணியின் கருத்திற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இந்த அண்ட சராசரத்தில் நாமெல்லாம் ஒரு தூசியை விடச் சிறியவர்கள் எனும் போது எதற்காக ஒருவருக்குத் தலைக்கனம் தோன்ற வேண்டும் என்ற கேள்வியை முன் வைக்கும் கரிணிக்கு நிறைந்த வாழ்த்துகள். மனித நேயத்தையும், வர்க்க வேறுபாடுகள் அற்ற உலகையும் வேண்டி நிற்கும் இக்கட்டுரைத் தொகுப்பு பலரது கைகளுக்கும் சென்றடைய வேண்டும் என்று விழைகிறேன்.

---

## கருகுமணி;

# பிற நாட்டில் வாழ்பவர்களுக்கு ஒரு பழந்தமிழ் அறிவுறுத்தல்

நன்னன் என்னும் தமிழ் மன்னன் "பெண் கொலை புரிந்தவன்" என்று கூறும் வழக்கம் உண்டு. அது தொடர்பாக ஒரு செய்தி பண்டைத்தமிழ் இலக்கிய மரபிலே உண்டு. சேரநாட்டைச் சேரந்த ஒரு பெண் நன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட பூழி நாட்டுக்குச் சென்றாள். அங்கே ஓர் ஆற்றிலே அவள் நீராடும் போது ஒரு மாங்காய் ஆவ்வாற்றிலே மிதந்து வருவதைக் கண்டாள்.கர்ப்பம் தரித்திருந்த அப்பெண் அந்த மாங்காயை உண்ணுதற்கு விருப்ப முடையவளா-னாள்.ஆனால் அந்த ஆற்றிலே நீராடிக் கொண்டிருந்த அந்நாட்டுப் பெண்கள் அந்த மாங்காயை உண்ணவேண்டாம் என்று சேரநாட்டுப் பெண்ணைத் தடுத்தார்கள். அவர்கள் அவ்வாறு தடுத்ததற்குக் காரணம் இருந்தது. நன்னனுடைய காவற்காட்டு மாமரத்தின் காயை யாராவது உண்டால் அவர்கள் கொலைசெய்யப்படுவார்கள் என்று ஓர் அரச ஆணை அங்கிருந்தது. இதனைத் தெரிந்திருந்த அவ்வூர்ப் பெண்கள் "நன்னனுடைய காவற்காட்டு மாங்காய் இதை உண்பவர்கள் தண்டிக்கப் படுவார்கள்" என்று கூறி அப்பெண்ணைத் தடுத்தார்கள். ஆனால் அப்பெண் விருப்ப மிகுதியினாலே அக் காயினை உண்டாள்.



காவலர்கள் அவளை மன்னன்முன் நிறுத்தினார்கள். மன்னன் அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். இதனாலே நன்னனை பெண்கொலை புரிந்த நன்னன் என சேர மன்னர்களும் ஏனையோரும் கூறினர். பிற நாட்டுப் பெண் ஒருத்தி இத்தவறைச் செய்தாள் என்பதை அறிந்து அவளை நன்னன் மன்னித்துவிட் டிருக்கலாம் என வாதாடலாம். இச்செய்தி ஊடாக நமக்கு ஒரு நல்ல பாடம் புகட்டப்படுகின்றது. பிற நாட்டுக்குச் செல்பவர்கள் அந்நாட்டுச் சட்டங்களை அறிந்து அவற்றை மீறாமல் வாழவேண்டும்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**



# லூட்ஸ் மாதா புனிதப்பயணம் 2024



March, July, August மாதங்களில்

புனித லூட்ஸ் மாதா
கோவிலுக்கான பயணங்கள்
பங்குனி, ஆடி, ஆவணி மாதங்களில்
உங்கள் பயணங்களுக்கு
முன்பதிவு செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு:
முருகா K.Muruga Handy: (49) 0175 850 1489





# இலக்கியத்தில் இவர்கள்... 43

கௌசி (யேர்மனி)

## அகப்பையை எறிந்து விட்டு அறிவுக் கண்ணைத் திறக்க வேண்டும்

இலக்கியத்தில் பெண்கள் இடம் பிடிப்பது ஒரு சவாலான விடயமாகவே இருந்திருக்கின்றது. குடும்பம் என்ற கட்டுக்கோப்புக்குள் தம்முடைய பாரிய கடமையாகவும் பொறுப்பாகவும் குழந்தைகளைப் பெற்று வளர்த்து குடும்பத்தைப் பாராமரிக்கின்ற முக்கிய பொறுப்பு பெண்களிடம் ஒப்படைக்கப் படுகின்றது. அத்தனை பொறுப்புக்களையும் தலைமேற் கொண்டு செய்கின்ற போதும் இலக்கிய முயற்சிகளில் தம்மை இனங்காட்டிக் கொள்ளுகின்ற பெண்கள் இருக்கவே செய்கின்றார்கள். ஆனால் எத்தனை திறமைகள் இருந்தும் தம்மை குடும்பத்துக்காக மட்டுமே அர்ப்பணிக்கின்ற பெண்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இந்தக் காரணமே இலக்கிய முயற்சிகளில் பெண்களின் பங்களிப்புக் குறைவாகக் காணப்படுகின்றது.

எமக்குக் கிடைக்கும் 2381 சங்கப்பாடல்களில் 2279 பாடல்களில் மட்டுமே அவற்றைப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரியவருகின்றன. அவர்கள் 475 பேர்கள் எனக் காணக்கிடக்கின்றது. இதிலே நச்செளளையார் நன்முல்லையார் ஆதி மந்தியார் நப்பசலையார் ஒக்கூர் மாசாத்தியார் காவற்பெண்டு நக்கண்ணையார் நெட்டிமையார் நெடும்பல்லியத்தை பொத்தியார் பேய்மகள் இளவெயினி வருமுலையாரித்தி வெண்ணிக்குயத்தியார் வெள்ளிவீதியார் பாரி மகளிர்கள் காமக்கண்ணியார் முடத்தாமக்கண்ணியார் பொன்முடியார் காக்கைப்பாடினியார் ஔவையார் போன்ற 32 பெண்பால் புலவர்களே அறியக்கூடியதாக இருக்கின்றது. ஏன் இத்தனைபேர்தான் இருந்தார்களா? அல்லது மறைக்கப்பட்டார்களா? என்பது கேள்விக்குறி.

இன்றும் பெண்களை அடக்கி வைக்கின்ற நடைமுறை காணப்படுகின்றது. தம்முடைய சொல்லை மீறி நடக்கின்ற போது பேச்சால் கொல்வது (பெண்களில் கை வைத்தால் காவல்துறை கொண்டு போய்விடும்) அவளுடைய அறிவை துச்சமாக மதிப்பது போன்ற நடைமுறைகள் ஆண்களிடம் காணப் படுகின்றது. இவை அவர்களிடம் தம்முடைய பரம்பரை மரபணுக்கள் இன்றும் இருப்பதை அடையாளங்காட்டுவதாக அமைகின்றது. இவை தற்போதும் நடைமுறை வாழ்க்கையில் பெண்களின் குற்றச்சாட்டுக்களாகக் காணப்படுகின்றன.

இக்காலப்பகுதியிலும் ஒரு இலக்கிய விழாவாக இருந்தால் தம்முடைய மனைவிமாருடன் இலக்கிய நிகழ்வுகளுக்குச் சமூகமளிக்கும் ஆண்களைக் காண்பது



அரிது. தம்முடைய மனைவிமாருக்கு இலக்கியத்தில் ஆர்வம் இல்லை என்று புறக்கணித்து அந்த ஆர்வத்தைத் தூண்டும் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள அவர்கள் முயல்வதில்லை.

இவை எல்லாவற்றுக்கும் தாய்வழி சமுதாயம் தந்தை வழி சமுதாயமாக மாறியதே காரணமாக இருக்க வேண்டும். கோடரியை ஆயதமாக வைத்திருக்கின்ற பரசுராமன் தன்னுடைய தந்தை ஆணையிடத் தாயைக் கொன்றிருக்கின்றான். இந்தக் கதை தந்தை வழி சமுதாயமாக மாறியபோதே தோன்;றியிருக்க வேண்டும். இதனாலேயே பெண்ணுக்குக் கற்பு போதிக்கப்பட்டது.

இலக்கியத் திறமையுள்ள பெண்களைத் தெய்வமாகப் பார்க்கின்ற தன்மையும் ஒருவகை அடக்குமறை என்றே சொல்ல வேண்டும். சிறந்த படைப்பாளியும் திறமையும் மிக்க காரைக்காலம்மையாரைத் தெய்வமாக காண்பதாக அவள் கால்களில் விழுந்து விடுகின்றான் பரமதத்தன். தான் விரும்பி வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து விடுகின்றான். காரைக்காலம்மையாரும் உனக்குப் பயன்படாத உடல் எனக்குத் தேவையில்லை என்று உணவை ஒறுத்து எலும்பு உடம்பு வேண்டிப் பெறுகின்றாள். சிலம்பு உடைத்து கணவனை நிரபராதி என்று நிறுவிய கண்ணகியைக் கூட வந்தவர்கள் நாட்டைத் தீக்கு இரையாக்கி கண்ணகியைக் கடவுளாக்கி விடுகின்றனர். இதனால் கண்ணகி வீரப் பெண்கள் அமைப்பு ஏற்படுத்த முடியாதவளாகி விடுகின்றாள்.

கணவன் தாலி என்னும் வேலி போட்டு மனைவியைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைக்கின்றான். தாலி என்பது நிமிர்ந்து வரும் ஆடவன் இவள் திருமணம் ஆனவள் என்று அடையாளங் காட்டுவதாக காரணம் காட்டுகின்றான். சில பெண்கள் எக்;ஸ்ரே எடுக்கின்ற போது கூடத் தாலியைக் கழட்டத் தயங்குகின்றார்கள். அவர்கள் தம்முடைய கணவனுக்கு ஏதாவது அபரிவிதமாக நடந்துவிடும் என்ற மூடநம்பிக்கையை வைத்திருக்கின்றார்கள். பெண்கள் கழுத்தில் அணியும் தாலி என்னும் அணிகலன் சங்ககாலத்தில் இருந்ததில்லை. 10 ஆம் நூற்றாண்டின் பின்புதான் அது வழக்கத்துக்கு வந்தது. அப்படியானால் அதற்கு முன் பிறந்த பெண்களுக்கு இந்தப் பயம் இருந்திருக்குமா?

நாம் இப்போது மேற்கொள்ளுகின்ற பண்பாட்டு அம்சங்கள் எமக்குரியவை அல்ல என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். உணவு தொடங்கி உடை வீடு விழாக்கள் அனைத்துமே அந்நியரின் படையெடுப்புக்களினாலும் மக்களின் மாற்றங்களினாலும் தமிழர்கள் மத்தியில் வந்து சேர்ந்தவையே. தற்போது பெண்கள் அணியும் புடைவை கூட தெலுங்கு பேசுகின்ற மக்களால் வந்ததே. சிலப்பதிகாரத்துக்கு முந்திய தமிழ் பெண்கள் மார்புக்கச்சை கூட அணிந்ததுக்கான சான்றுகள் கிடைக்கவில்லை. கி.பி 9 ஆம் நூற்றாண்டின் பின்பே மார்புக்கச்சை அணிந்தார்கள். தெலுங்கு மக்களாலேயே இரவுக்கை அணியும் வழக்கம் வந்தது எனத் தன்னுடைய ஆய்வின் மூலமாக தொ.பரமசிவன் எடுத்துரைக்கின்றார். எனவே பண்பாடு கலாசாரம் என்று பெண்களின் ஆளுமைக்கு விலங்கு போட முடியாது.

நளாயினி தன்னுடைய குஷ்டரோகியான தன்னுடைய கணவனைத் தாசியின் வீட்டுக்குக் கூடையிலே சுமந்து செல்கின்றாள். தீக்குளிக்க வைத்துக் காட்டில் விட்டுத் துன்புறுத்தப்பட்ட சீதை கோவலனால் தவிக்கவிடப்பட்ட கண்ணகி மாதவி இவ்வாறான வடமொழி இலக்கியங்களை கற்பித்த காரணத்தால் பிற்குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புமிக்க பெண் இலக்கிய ஆளுமைகளின் படைப்பாற்றலை இன்று இழந்து நி;ற்கின்றோம்.

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே மூதின் மகளிர் ஆதல் தகும் என்று பாடும் ஒக்கூர் மாசாத்தியார்

*பால்கொண்டு மடுப்பவும்*
*உண்ணான் ஆதலின்*
*செறாஅது ஓச்சிய சிறுகோல்*
*அஞ்சியோடு*
*உயவொடு வருந்தும் மன்னே!*
*இனியே*
*புகர்நிறம் கொண்ட களிறு*
*அட்டுஆனான்*
*முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே*
*உன்னிலன் என்னும்*
*புண்ஒன்று அம்பு*
*மானுளை அன்ன குடுமித்*
*தோல்மிசைக் கிடந்த*
*புலஅண வோனே*

குழந்தைப் பருவத்திலே பால் உண்ணாமல் இருக்க கோபம் கெண்டவளைப் போலச் சிறுகோலை எடுத்தால் பயந்து உணவு உடனே உண்ணுகின்ற தன்மையையுடையவனே இன்று களிறுகளைக் கொன்றும் தளராது அந்தப் போரிலே மார்பகத்து அம்புபட்டுக் கேடகத்தின்மேல் வீழ்ந்து கிடந்தவனை எடுத்து ‘ஐயோ! மார்பில்

28 ஆம் பக்கம் பார்க்க...












# முள்ளியவளை உறவுச்சோலை காப்பகத்தின் நிதி திரட்டலுக்காக!

# பாட்டினில் அன்பு செய்!







கடந்த மாதம் மாலை (17.02.24) இங்கிலாந்தில் ஒக்ஷொட் இல் SRS தமிழ் வானொலியின் ஐந்தாவது ஆண்டு நிறைவின் நிமித்தம், மறைந்த 'இசைக்கலாமணி, சங்கீத பூஷணம், சங்கீத வித்துவான் திரு சங்கர நாராயணன் விருது வைபவம்' இனிதே நடைபெற்றது. ஊடகத்துறையில் 50 ஆண்டுகள் வழங்கிய சேவையை பாராட்டி திருமதி ஆனந்தராணி பாலேந்திரா (தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்) அவர்களுக்கு"பொன்னொளி"விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வாழ்நாளில் ஆற்றிய சாதனைகளை நினைவுறுத்தி, சங்கீத வித்வான் திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி, ஈழத்து மெல்லிசைப்பாடகர் திரு.மா.சத்தியமூர்த்தி, வெற்றிமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியர்/ஓவியர் திரு மு.க.சு.சிவகுமாரன் அவர்களையும் "சிரஞ்சீவி "விருதினை வழங்கி கௌர விக்கப்பட்டனர்.

அமுத மொழி கொண்டு அகில விழிகளில் கதிர் வீசும் ஆளுமை ஈழத்து எழுத்தாளர் திருமதி. கலா சிறீரஞ்சன் அவர்களும்" அமுதக்கதிர்"விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்டார். எத்திக்கும் தித்திக்க மொழியாளும் திறம் கொண்ட திருமதி. நிறைஞ்சனா சுரேஷ்குமார் (SRS தமிழ் வானொலி)அவர்களும் "மதுரமதி" விருதினையும், பல்கலை வித்தகம் கொண்டு நற்பணி புரியும்திருமதி கோ.தர்சினி அவர்களும் "கலாபதி"விருதினையும், 40 ஆண்டுகள் சேவையை பாராட்டி திரு.ரவி ஷான் அவர்களை மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் எள்ளுப்பேரன் நிரஞ்சன் பாரதி அவர்களால் "ஓர் ஆண் கலைத்தாய்" என்ற வாழ்த்தினை வழங்கியும் SRS தமிழ் வானொலியில் வழங்கும் சேவைகளை பாராட்டி திரு ரமேஸ் கந்தசாமி, திரு தணிகாசலம் உதயபானு, திரு விஸ்வலிங்கம் சுரேஸ்காந்தன்,"கலாபூஷணம்" "சங்கீத வித்துவான்" திருமதி வத்சலாதேவி சங்கரநாராயணன், திருமதி கௌரி கமல், திருமதி தர்சினி சிவசுதன், "சங்கீத வித்துவான்" ஸ்ரீமதி சசிகலா கோதண்டபாணி, மற்றும் SRS தமிழ் வானொலிக்கு ஆக்கங்களை வழங்கும் கலைஞர்களையும் கௌரவித்தார்கள்.

இதன் நிர்வாகி, ரவி ஷங்கர் சங்கரநாராயணன், அவர் மனைவி அமுதா, விழாவை ஒழுங்கு செய்து, நெறிப்படுத்திய நிரா சுரேஸ் உட்பட அனைவரது திறமைகளும் நிகழ்வுகளின் கட்டமைப்பில் செவ்வனே மிளிர்ந்தது.

முள்ளியவளை உறவுச்சோலை காப்பகத்தின் நிதி திரட்டலுக்காக! பாட்டினில் அன்பு செய்! நிறைவாகவே செய்தது.



BOCHUM நகரில்...

LOTO LADEN விற்பனைக்கு உண்டு

யேர்மனியில் Bochum நகரில் Rewe Markt இல் உள்ளே
அமைந்துள்ள Lotto Laden விற்பனைக்கு உண்டு.
விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.




தொடர்புகளுக்கு:
0234-2399032




# காட்டு குதிரைகளின் தாயகம் நெடுந்தீவு



நிஷாந்தி பிரபாகரன் (இலங்கை)

நெடுந்தீவு நீருக்கடியில் டைவிங் ஆர்வலர்களுக்கு சிறந்த திறனைக் கொண்டுள்ளது. இது படிக-தெளிவான நீர் மற்றும் ஏராளமான கடல் பல்லுயிர், துடிப்பான பவளப்பாறைகளை ஆராய்வதற்கும் பல வண்ணமயமான மீன் இனங்களை சந்திப்பதற்கும் சிறந்த இடமாக அமைகிறது

நெடுந்தீவுப் பிரதேசத்தின் இயற்கைத் தாவரங்களாக பூவரசு, வேம்பு, ஆல், அரசு, கித்தி, புளி, நொச்சி போன்ற மரங்களும் பனையும் தென்னையும் அதிகமாக காணப்படுகின்றன. செடி கொடிகளாக பிரண்டை, குறிஞ்சா, காரை, ஆரை, தூதுவளை, காட்டுக்கருணை போன்றனவும் மருத்துவ மரங்களாக மாதுளை, எலுமிச்சை, வில்வை, விளாத்தி, சண்பு, புளி, வேம்பு, வாகை முதலியன அதிகளவில் இங்கு காணப்படுகின்றன.





வாழ்நாளில் ஒரு முறையாவது பார்வையிட வேண்டிய இடம். யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகப்பெரிய மற்றும் அழகிய தீவு.

நெடுந்தீவில் காணப்படும் பாரம்பரிய கலாச்சார மையங்கள் சுற்றுலாப் பயணிகளை கவருவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் இப் பாரம்பரிய மையங்கள் ஒவ்வொன்றின் சிறப்புகளையும் அவற்றின் முக்கியத்துவம் மற்றும் பெருமைகளை பார்ப்போம்.

### வரலாற்றுச் சின்னங்களும், அடையாளங்களும்


1.வெடியரசன் கோட்டை
2.பெரியதுறை
3.மாவிலித்துறைமுகம்
4.போர்த்துக்கீசர் கோட்டை
5.ஒல்லாந்தர் கோட்டை
6.குதிரைகள்
7.குதிரை லாயங்கள்
8.குவின்ஸ் டவர்
9.பூதம் வெட்டிய கிணறுகள்
10.40 அடி மனிதனின் காலடி
11.பழமை வாய்ந்த ஆலமரம்
12.அரசனை அரசு
13.பெருக்கு மரம்
14.மணல் கடற்கரை
15.வெள்ளைக் கடற்கரை
16.புறாக்கூடு
17.கல்வேலி
18.வளரும் கல்

வடமாகாணத்தின் ஓர் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கும் 'நெடுந்தீவு' இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தென்மேற்கில் அமைந்துள்ள லைடன் தீவு, புங்குடு தீவு, நைனா தீவு, காரை நகர், நெடுந்தீவு, அனலதீவு, எழுவைதீவு சப்ததீவுகளிலே ஒன்றாக விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து தீவை அடைய பயணிகள் படகு சேவை அல்லது ஒரு சிறிய விமானத்தை எடுத்துக்கொண்டு செல்லலாம். பயணிகள் படகு அட்டவணையின்படி பயணகால அட்டவணையை திட்டமிட வேண்டும், 'நெடுந்தராகி' மற்றும் 'வட தராகி' என்ற இரண்டு பெரிய படகுகள் உட்பட, 'குரிகாட்டுவான் முதல் நெடுந்தீவு வரை சுமார் ஐந்து படகு பயணங்கள் உள்ளன. குறிகட்டுவான் ஜெட்டியில் இருந்து புறப்பட்டு தீவு நோக்கிய பயணம் தோராயமாக ஒரு மணிநேரம் ஆகும். கடல் நிலைமைகள் மாறுபடுவதால் தீவுக்கான பயணம் கடினமாக இருக்கும். இருப்பினும், நெடுந்தீவுக்கு அருகாமையில் அமைந்துள்ள பல தீவுகளைக் காணலாம். மற்றும் சில

24 ஆம் பக்கம் பார்க்க...

## மகாரிஷி கேரளா ஆயுர்வேத மருத்துவம்






குருஜீ Dr.PL. ஜெஜாபதி | 01521 69 611 80

(இலவசமாக நாடி பார்த்து உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படும்.)

நாங்கள் ஆதிவாசி மக்கள்.எங்கள் குலத்தொழில் மூலிகை வைத்தியம். கடந்த 5 தலைமுறைகளாக பரம்பரை மூலிகை வைத்தியம் செய்து வருகிறோம் நாடி பார்ப்பதில் மிகவும் கைதேர்ந்தவர். குருஜி Dr.PL. ஜெஜாபதி அவர்கள்.எங்களிடம் 361 வகையான வியாதிகளுக்கும் மூலிகை வைத்தியம் அளிக்கப்படுகிறது.ஒரு முறை நம்பிக்கையாக வாருங்கள் மனநிறைவுடன் செல்வீர்கள்.1 வாரத்திற்குள் குணம் தெரியும் 100% உறுதி.

ஆஸ்துமா, ஆண்மைகுறைவு, மாதவிடாய் பிரச்சனை, தோல்வியாக, குழந்தை பாக்கியம், கைகால் மூட்டு வலி, ஜவ்வு தேய்மானம், மூலம் வியாதி, பக்கவாதம், அல்சர், உடல் எடை அதிகரிக்க குறைக்க, உயிர் அணுக்கள் கூடுதல், ஆண்மை வீரியம் அதிகரிக்க, நரம்பு தளர்ச்சி, கிட்னி கல், தீராத கை கால் வலி நடுக்கம்.



ஆகிய அனைத்து வியாதிகளுக்கும் சிறந்த முறையில் நிரந்தர மூலிகை வைத்தியம் அளிக்கப்படும்.

## 23 வது ஆண்டு நினைவுப் பூக்கள்

செல்வி கஜனி தேவராஜா
(பிறேமன், ஜெர்மனி)
மலர்வு:12.05.1988
பிரிவு 16.03.2001



எங்கள் அன்புச் செல்லம்
கஜனி அம்மா
ஆண்டுகள் இருபத்தி மூன்று
ஆனாலும்
உன்முகம் இன்றும்
எம் நெஞ்சில் நிழலாடுதே
காலம் கரையலாம்
உன் நினைவுகள்
எம் உயிர் உள்ளவரை
எம்மோடு வாழும்.

என்றும் உன் நினைவோடு
அம்மா, அப்பா, அக்கா, அத்தான்
எஸ். தேவராஜா (இங்கிலாந்து)

## சுற்றுலாவிகளைக் கவரும் வடக்கின் தீவுகள்






# காட்டு குதிரைகளின் தாயகம் நெடுந்தீவு

வேளைகளில் கடல்வாழ்உயிரினங்கள் டால்பின்கள் அல்லது கடல் ஆமைகள் படகுடன் சேர்ந்து நீந்தி வரும்.

நெடுந்தீவில் மட்டுப்படுத்தப்பட்ட சிறிய சாப்பாட்டு கடைகள் உள்ளன. தீவை முழுவதுமாக சுற்றிப்பார்க்க போதுமான உணவையும் குடிபானங்களையும் எடுத்துச் செல்வது நல்லது. தீவு சற்றே தொலைதூர பகுதி என்றாலும், பல இடங்களைப் பார்வையிடலாம். தீவை சுற்றிப்பார்க்க பல்வேறு போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து கொள்ளும் வசதி இருக்கின்றது. நடந்தே தீவை சுற்றிப் பார்க்கலாம் அல்லது ஒரு முச்சக்கர வண்டியை வாடகைக்கு எடுக்கலாம். அல்லது குழுவாக பயணிக்க சிறிய லாரியைத் தேர்வு செய்யலாம்.

நெடுந்தீவு நீருக்கடியில் டைவிங் ஆர்வலர்களுக்கு சிறந்த திறனைக் கொண்டுள்ளது. இது படிக-தெளிவான நீர் மற்றும் ஏராளமான கடல் பல்லுயிர், துடிப்பான பவளப்பாறைகளை ஆராய்வதற்கும் பல வண்ணமயமான மீன் இனங்களை சந்திப்பதற்கும் சிறந்த இடமாக அமைகிறது. இந்த நீருக்கடியில் உள்ள சொர்க்கத்தை ஆராய்வதில் அதிகரித்து வரும் ஆர்வத்தை பூர்த்தி செய்யும் வகையில் டைவிங் வசதிகள் மற்றும் சுற்றுப்பயணங்கள் படிப்படியாக உருவாக்கப்பட்டு வருகின்றன.

தீவு வளர்ச்சியடையாதது. இங்கு ஆலங்கேணி, பெரியான்துறை, மாலவி துறை, பூமுனை, சாமி தோட்டம், வெல்லை, குந்துவாடி, தீர்த்தகரை ஆகிய ஊர்கள் உண்டு. மக்களின் வாழ்க்கை முறை விவசாயம் மற்றும் மீன்பிடித்தல் போன்ற தீவின் வளங்களைச் சுற்றியே உள்ளது. இன்று இங்கு பொருளாதார வசதிகள் அருகிய தமிழ் மீனவ சமூகத்தைச் சார்ந்த 3000 இருந்து 4,500 மக்கள் கடும் சிக்கல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கு கல்வி, மருத்துவம் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் கூட கிடைப்பதில்லை. நெடுந்தீவு தீவில் மீன்பிடி கிராம பாரம்பரியத்தினை காணலாம் பாரம்பரிய மீன்பிடி படகுகள் கரையோரத்தில் உள்ளன,

இந்த தீவு அதன் அழகிய கடற்கரைகளுக்கும், பரந்த திறந்தவெளிகளுடன் பசுமையான பனை தோப்புகளுக்கும் பெயர் பெற்றது. தீவு முழுவதும் சுண்ணாம்பு அடுக்குகள் நிறைந்துள்ளது. தீவில வேலி கட்டப்பட்ட சுவர்கள் இல்லை மற்றும் ஒவ்வொரு பக்கத்திலும் சுண்ணாம்பு சுவர்கள் உள்ளன. ஒரு காலத்தில் புலம்பெயர்ந்த பறவைகளின் புகலிடமாக இருந்த இந்த தீவு பறவைகளின் சொர்க்கமாக இருந்தது.

நெடுந்தீவின் அடித்தளப் பாறையும் மற்றத் தீவுகளை விட அகலமானதும் விரிந்து கிடப்பதுமாகும். நாற்புறமும் இறவட்டம் எனப்படும் கரைப்பகுதியே 500 மீற்றருக்குக் குறையாத தூரத்தைக் கொண்டது. கடல் நீர் வற்றும் போது இதைப் பார்க்கலாம். இறவட்டத்தில் பாரிய இயற்கை கற்கள் நாற்புறக் கடலிலும் நட்டுக் கொண்டும், பரவலாகவும் நிறைந்து அலைகளை எதிர் கொள்கின்றன.

தரைத்தோற்றமானது தென் பகுதி உயரமான மேட்டு பிரதேசமாகவும் மத்திய பகுதி தாழ்ந்த பகுதியாகவும் காணப்படுகின்றது. மண்வளமானது பாறைத் தன்மைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளதை காணலாம். நெடுந்தீவின் மேற்கே சிறப்பான கருமையான இருவாட்டி மண் காணப்படுகின்றது. நன்நீரும் மண் வளமும் தோட்டப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக உள்ளது. மற்றும் மண் தன்மையும் சுவாத்தியமும் பனை வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வாய்ப்பாக இருக்கின்றது.

நெடுந்தீவுப் பிரதேசத்தின் இயற்கைத் தாவரங்களாக பூவரசு,வேம்பு,ஆல்,அரசு, கித்தி, புளி, நொச்சி போன்ற மரங்க ளும் பனையும் தென்னையும் அதிகமாக காணப்படுகின்றன. செடி கொடிகளாக பிரண்டை, குறிஞ்சா, காரை, ஆரை, தூதுவளை, காட்டுக்கருணை போன்றனவும் மருத்துவ மரங்களாக மாதுளை, எலுமிச்சை, வில்வை, விளாத்தி, சண்பு, புளி, வேம்பு, வாகை முதலியன அதிகளவில் இங்கு காணப்படுகின்றன.மொத்தத்தில் இது ஒரு மருத்துவ பூமி.










27.01.2024 அன்று எசன் நகரில் இளையோர் நடத்திய பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக பொங்கல் விழாவை எசன் நகரத்து இளையவர்கள் நடத்துவது பாராட்டுக்குரியது. ஜெர்மனிய நடன ஆசிரியர்கள் பரதநாட்டிய நிகழ்வுகளை வழங்கியிருந்தார்கள். பிரதம விருந்தினராக சிவஸ்ரீ சாம்பசிவ ஸ்ரீதரக் குருக்களும் கௌரவ விருந்தினராக திருமதி சிபோ.சிவக்குமாரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக சதுர்ஷா சுகுகுமார் ஸ்ரீமுருகன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.



கவிஞர்
இளவாலை விஜேந்திரன்

# சூர்ப்பணகை

நுண்கலைகளை மற்றோரோடு பகிர்வோர் அது எத்தனை தூரம் அவர்களைச் சென்றடைகிறது என்பது தொடர்பில் எவ்வளவு தெளிவாக உள்ளனர் என்பது பெரும் கேள்வியே. நுண்கலைகள் மக்களின் ரசனை மட்டத்துக்குச் சற்று மேலே நிற்பதும், அதனைப் படைப்போர் தாம் அந்தத் தூரத்திலிருந்து கீழிறங்குவதிற் காட்டும் தயக்கமும் நாம் அறியாத ஒன்றல்ல. கலை மக்களைச் சென்றடைய வேண்டியது அவசியமா அல்லது மக்கள் தங்கள் கலைரசனையை உயர்த்திக்கொள்வது அவசியமா என்ற கேள்வி அவ்வப்போது வந்துபோவதுண்டு. நல்ல கலைவடிவங்களைத் தொடர்ச்சியாகத் தரும் கலைஞர்கள், தமது படைப்பு பலரிடம் சென்றடையும் வழியை இலகுவிற் கண்டடைவார்கள்.



> **எமக்கெல்லாம் சூர்ப்பணகை என்றதும் மனதிற் தோன்றும் படிமம் எதிர்மறையானது. பல தமிழ்ப்படங்களில் வரும் ‘வில்லி’களைவிட மோசமானது என்றும் கூறலாம். அதேவேளை ராமன் புனிதனாகவும் ஏகபத்தினி விரதனாயும் உறைந்துவிட்ட எண்ணக் கோலங்கள் இவ்வரங்கில் முதன்முறையாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டன.**

அவ்வாறான நிகழ்வொன்று இவ்வருட ஆரம்பத்தில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவை அண்டிய சண்விக்கா நகரில் இடம்பெற்றது. அரங்கு நிறைந்த அந்தக் காட்சி வந்தவர்களை மகிழ்வித்ததுடன், கொஞ்சம் சிந்திக்கவும் வைத்தது. புலம்பெயர் நாடுகளிற் தமிழரை மையப்படுத்திய நிகழ்வுகள் பெரும்பாலும் பொழுதுபோக்காகவே அமைவன. அவற்றிற் கணிசமானவை திரையிசை சார்ந்தே நிகழ்த்தப்படுபவையும்கூட. திரையிசை இல்லாத, முழுநீள நிகழ்வுகள் பார்வையாளர்களைப் பெருமளவில் ஈர்ப்பதில்லை எனப் பொதுவாக நம்பப்படுகிறது. ஹசூர்ப்பணகை ஹ என்ற தலைப்பில் இடம்பெற்ற இந்த நாட்டிய நிகழ்வு ஒரு விதிவிலக்கு, தொடர்ச்சியான பல விதிவிலக்குகளின் ஒரு பகுதி என அழைக்கப்படக்கூடியது. இது கவிதாலட்சுமி என்று கலை, இலக்கிய உலகில் அறியப்பட்ட ஒருவரால் சாத்தியப்பட்டது.

சிறுவயதில் நோர்வேக்குப் புலம்பெயர்ந்த கவிதா லட்சுமி தனது குடும்பச் சூழலில் இருந்து கலை இலக்கிய ஆர்வத்தை வளர்த்துக் கொண்டவர். அவருடைய தொடர்ந்த தேடலும், துணிச்சலான வெளிப்பாட்டு ஆர்வமும் நல்ல பல அரங்க நிகழ்வுகளை ஒஸ்லோவிலும் அதற்கு அருகில் உள்ள இடங்களிலும் தந்திருக்கின்றன. இவ்வாறான ஒரு தொடர் மிக நிகழ்வின் ஓர் அம்சம் தான் சூர்ப்பணகை. கல்கியின் ஹசிவகாமியின் சபதம் ஹ, பாரதியாரின் ஹஞானரதம்ஹ, தமிழின் புகழ்பெற்ற கவிஞர்கள் பலரது கவிதைகளுக்கு – பாடல்களுக்கல்ல – அமைக்கப்




பட்ட நடனங்கள், மாதவியின் பதினோராடல்கள் எனக் கவிதாவின் முயற்சிகள் புதிய தளங்களைத் தொட்டுச் செல்பவை. வேறு நாட்டிய ஆசிரியர்கள் தொடாத விடயங்கள்தான் அவரது மேடையை அலங்கரிப்பவை.

எமக்கெல்லாம் சூர்ப்பணகை என்றதும் மனதிற் தோன்றும் படிமம் எதிர்மறையானது. பல தமிழ்ப்படங்களில் வரும் ஹவில்லிஹகளைவிட மோசமானது என்றும் கூறலாம். அதேவேளை ராமன் புனிதனாகவும் ஏகபத்தினி விரதனாயும் உறைந்துவிட்ட எண்ணக் கோலங்கள் இவ்வரங்கில் முதன்முறையாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. ஓர் அரங்கில், நாம் முன்னரே அறிந்த விடயங்களை அப்படியே படைப்பதுதான் நடன நிகழ்வுகளாய் நாம் பொதுவாகக் காண்பது.

28 ஆம் பக்கம் பார்க்க...





# இடம் பெயர முதல் இருந்த யாழ்ப்பாணம் இப்ப வரை இல்லை!

## பிரி(யா)விடை

9 ஜ”லை 1995 காலமை ஆசுபத்திரீ காலமை கணேசரட்ணம் சேர் ward round இல படிப்பிக்கேக்க patient ஐ விபரங்கள் சரியாக் கேட்டு வைக்கேல்லை எண்டு senior group இல எல்லாரையும் wardக்கு வெளீல கலைச்சு விட்டிட்டார். ஆர்டை நோயாளி எண்டு சேர் கேக்கேக்க ஒற்றுமையா காட்டிக் குடுக்காம விட்டிட்டு பிறகு “எல்லாம் அரவிந்தனால“ எண்டு பெட்டைகள் விரலை நீட்ட, நான் canteen இல சாப்பிட்டிட்டு வாறன் எண்டு அரோ போனான்.

படிப்பை மட்டுமே மூச்சாயும் மூலதனமாயும் நினைச்சு வந்திருந்த எல்லாப்பொம்பிளைப் பிள்ளைகளும் சில பெடியளும் “சேர் இனிமே இப்பிடி நடக்காது“ எண்டு சொல்லிக் காலில விழ, “சரி , இண்டைக்கு இரவும் நிண்டு எல்லாரும் full history யும் கேட்டு வையுங்கோ“ எண்டு கணேசர் சொல்ல, “ஓம் சேர்“ எண்டு சொன்னது நல்லூர் முருகனுக்கே கேட்டிச்சுது.

பின்னேரம் போல “அடேய் இண்டைக்கு கணேசர் medicos nite க்கு chief guest ஆப் போறாராம் நாங்கள் பின்னேரம் வரத்தேவேல்லை“ எண்டு சிலர் வெளிக்கிட “சேர் சொன்னாக் கட்டாயம் வருவார்“ எண்டு பெட்டைகள் வெருட்ட வெளிக்கிட்ட பெடியள் திருப்பி நிண்டிச்சினம். ஆர்வக்கோளாறுக்காரர் எல்லாம் அண்டைக்கு வயித்துநோ, கட்டி வெண்டு வந்த ஆளை வைச்சு கட்டி கரைஞ்சு போற அளவுக்கு அமத்திப் பாக்க சிலர் மட்டும் Nursing பழக வந்த பிள்ளைகளோட “சள்“ அடிச்சுக்கொண்டு இருந்திச்சனம். புத்தகத்தைப் படிச்சு ஏறாத அறிவை தலைக்கு கீழ படுக்க வைச்சு ஏத்திக் கொண்டு சிலர் இருந்திச்சினம். பாவம் இந்த குறூப் அண்ணாமாரும் அக்காமாரும் மட்டும் இரவிரவா ஆஸ்பத்திரீல நிக்க மருத்துவபீடம் களைகட்டி இருந்திச்சுது.

பின்னேரம் medical facult ல் Ragging நேரத்தில பாத்தோண்ணயே பிடிச்சதும் சரிவராம, “பழகப் பழகப் பிடிச்சிடும் எண்டு ஒண்டாப் படிச்சதும் சரிவராம கடைசி நாள் வரை முயற்சியை கைவிடாம தன்டை காதல் அம்புகளை இசைரொக்கற்றில விட்டுக்க கொண்டிருந்தார் ஒரு அண்ணா. மருத்துவ பீட farewell நிகழ்வில இது எப்பவுமே நடக்கிறது. இவர் விட்ட இசைத்தூதுக்கு இணை எங்கடை பீலிங்குக்கு ஏத்த மாதிரி மழை மட்டும் பெய்யத் தொடங்கிச்சுது. முதலாவது வருசத்தில கம்பஸில நடக்கிற ஒவ்வொரு நிகழ்வுக்கும் புதுசா வாறாக்கள் தான் எடுபிடி , ஆனாலும் எங்களுக்கும் எல்லாத்திலேம் பங்கு கிடைக்கும்.

கட்டி முடிக்காத இப்பத்தைய Hoover Auditorium சுவருக்கு பாயைக் கட்டி வைச்சதால பேர் வந்த “பாய்க்கடை“. இந்தப் பாய்க்கடைப் பக்கம் காத்து வாங்கிறதுக்காக போன கூட்டம் நல்ல “கணகணப்போட“ திருப்பி வந்திச்சுது. வந்த குறூப் சும்மா நிக்காமல் சுதியோட வந்து சோகப்பாட்டுக்கும் லயத்தோட ஆடத் தொடங்கிச்சுது. இந்த ஜோதீல பலர் சேர நல்ல பிள்ளைக்கு நடிச்சுக் கொண்டிருந்த சிலர் மட்டும் “வாங்கோ சேந்து குறூப்பா படம் எடுப்பம்“ எண்டு சொல்லீட்டு இரகசியமா ரெண்டு பேரா போச்சினம்.

படம் எடுக்கிறதை எட்டிப் பாப்பம் எண்டு போய்ப் பாத்தா இந்த ஊர்க்காரரர் இந்தப் பள்ளிக்கூட காரர் எண்டு தேடிக் கூப்பிட்டும் தங்கடை சோடிகளோட இணைஞ்சும் படம் எடுத்துக்கொண்டு இருந்திச்சினம் கொஞ்சப் பேர். சோடிகளோட இணையாத பல பேர் இசையோட இணைஞ்சு இருத்திச்சினம். பெய்த மழையில கேட்ட பெரிய இடி உள்ளயா வெளியையா எண்டு தெரியாத அளவு உச்சம் தொட்டிருந்தது பிரியாவிடைப் party. மேடைக்குப் பக்கத்தில கொஞ்சப்பேர் “ குரங்குகள் போலே மரங்களின் மேலே“ எண்டு பாட்டை கும்பலா பாடமாக்கிக் கொண்டு இருந்திச்சினம், கடைசியாப் பாடிறதுக்கு. பிரியிற சோகம் பெரிசாக ஆடிற இடத்தை தாண்டி ஆக்கள் இருக்கிற இடத்தையும் ஆக்கிரமிக்கத் தொடங்கிச்சினம்.

நாசூக்கா , நாகரீகமா “ நாங்கள் வெளிக்கிடிறம்“ எண்டு கொஞ்சக் காஞ்சிபுரம் கட்டினவையும், டை கட்டினவையும் வெளிக்கிடத் தொடங்கிச்சினம். உடுக்கேறியும் கலை வராத ஆக்களுக்கு கலவைப் பானம் குடுத்து ஆட வைக்க முயற்சிகள் தீவிரமா நடந்து கொண்டிருந்திச்சுது.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

### இரவு ஆசுபத்திரி:


வெளீல பெய்த மழையும் இடிச்ச இடியையும் தாண்டி அங்க எங்களை விட்டிட்டு party போடிறவங்களை திட்டிக் கொண்டிருந்த studentsக்கு ஆசுபத்திரீல இருந்து “கணேசரட்ணம் சேருக்கு“ அம்புலன்ஸ் போகத் தான் ஆசுபத்திரி எல்லாம் தெரிய வந்திச்சுது ஒருக்கா மட்டும் கேட்ட இடி இறங்கினது நவாலி churchக்க எண்டு.

பள்ளிக்கூடக் காலத்தில ஆனந்தராஜா சேரை சுட்டிட்டாங்களாம் எண்டு கேட்ட உடன எப்பிடி கிரவுண்ட் வெறிச்சோடி ஆசுபத்திரி நிரம்பிச்சுதோ அப்பிடித்தான் இண்டைக்கும் நடந்திச்சுது மருத்துவபீடம் வெறிச்சோடி ஆஸ்பத்திரி நிரம்பிச்சுது.

ஆசுப்பத்திரில இருக்கிற ஒரு அம்புலன்ஸை அனுப்பி என்ன செய்யிறது, எத்தினை வாகனம் தேவை எண்டு நிர்வாகம் யோசிக்க ஓட்டோ, மோட்டசைக்கிள், land master எண்டு நிண்ட எல்லா வாகனத்திலேம் காயக்காரரர் வந்திறங்கிச்சனம். வந்தவனுக்குப் பதிவு ஒண்டும் போடாமல் நேர வாட்டில விட்டிட்டு, பெரிய காயக்காரரை வாநயவசந க்கு கொண்டு போகத் தொடங்கிச்சினம். ஒப்பிரேசன் தியட்டருக்க போய்ப் பாத்தா ஒரு trolley இல ரெண்டு மூண்டு பேராக் கிடத்தி இருச்சினம். Theatre வாசலிலியே ஒப்பிரேசனுக்கு எடுக்க முதலே ஒவ்வொரு உயிராப் பிரியத் தொடங்கிச்சுது. வீம்பா அறிக்கை விட்டு நான் டொக்டரா ■

27 ஆம் பக்கம் பார்க்க...






வெற்றிமணி திருமண சேவை

முதுகலைப்பட்டபடிப்புடன் கௌரவமான வேலையிலிருக்கும் மணமாகி விவாகரத்தான 40 வயதுடைய பெண்ணுக்கு பெற்றோர்கள் வரன் தேடுகின்றனர். வரன் லண்டன் யேர்மனி சுவிஸ் ஆகிய நாடுகளில் வசிப்பவராக இருக்க வேண்டும் .

தொடர்புகளுக்கு: 0049 1774219510

Woman , a postgraduate and having prestige job, 40+ of age. married and divorced. Her Parents seek groom from one of the following countries> London> Germany and Switzerland.

For Contacts. 0049 1774219510.

# இடம் பெயர முதல் இருந்த யாழுப்பாணம் இப்ப வரை இல்லை!

## பிரி(யா)விடை

வாறது தான் நோக்கம் எண்டு பாலர் வகுப்பிலயே சொல்லிப் படிச்சு வந்த வெள்ளைக் கோட்டுக் கார senior அக்கா மார் இறந்ததுக்கெல்லாம் உயிர் கொடுக்க முயற்சிச்சு சரிவராதெண்டு அறிஞ்சு விக்கி விக்கி அழுது கொண்டு நிண்டிச்சினம். கடைசியா OPD யில வந்திறங்கின



tractor ஆல இறங்கக்கூடிய ஆக்கள் இறங்கி வர, இறங்க ஏலாததுகளை தூக்குவம் எண்டு போய் கையைப்பிடிச்சுத் தூக்கினவனுக்கு கைமட்டும், காலைப் பிடிச்சவனுக்கு கால் மட்டும் கிடைச்சுது. முழுசா ஒண்டு கூட இருக்கேல்லை. எல்லாத் துண்டையும் இறக்கீட்டு அண்டிரவு முழுக்க கையெது காலெது எண்டு பாத்த jig saw puzzle மாதிரி பொருத்தீட்டு அடையாளம் கண்டு பிடிச்சாக்களை அப்பிடியே கட்டிக் குடுத்து விட்டிச்சினம் death certificate கூட இல்லாமல்.

### அடுத்தநாள் விடியாத பொழுதில்

செத்தவை ஆரார் எண்டு பேப்பர்காரான் தான் கண்டுபிடிச்சுப் போட்டிருந்தான். பொறுக்காத பொருந்தாத துண்டுகளின் கணக்கு எத்தினை எண்டு இப்பவரை தெரியாது. இந்த சோகத்தை ஊர் அழுது முடியமுதல் அடுத்தடுத்த ஊரிலேம் இடம் பெயர்வு வர எட்டுச் செலவு எட்டாமலும், அந்திரட்டி அந்தரிச்சும் போனது.

### உலக வரலாற்றில் முதன் முதலாக ஒரு இனமே மரதன் ஓடியது! இடம்பெயர்வு 30.10.1995

" பல்கலைக் கழகம் அகதி முகாமானது" எண்ட தலைப்போட ஒரு நாள் உதயன் வர அதோட சனம் ஒதுங்கின இடம் எல்லாம் அகதி முகாமாக மாற, அண்டின சனத்



துக்கு அண்டைக்கு சமைச்சதை பிரிச்சுக் குடுத்துச் சாப்பிட்டிட்டு அடுத்த வேளை கூட சமைக்கலாமா இல்லையா எண்டு சனம் யோசிச்சுக் கொண்டு இருந்திச்சுது.ஸ்பீக்கர் வைச்சு ரோடு ரோடாப் போய் வெளிக்கிடச் சொன்னதை கேக்காம ரெண்டு நாள் பொறுத்துப் பாப்பம் எண்ட சனம், துவக் குச்சூட்டுக்கும் அசையாத சனம், குண்டு விழுந்தாலும் வரமாட்டேன் எண்ட சனம் எல்லாம் கடைசீல வீம்பைக் கைவிட, உலக வரலாற்றில் முதன் முதலாக ஒரு இனமே மரதன் ஓடியது. உயிரற்றதை எல்லாம் அப்பிடியே விட்டிட்டு, மனமில்லாமல் அடை வைச்ச முட்டையைக் கூட அரை உயிரோட கொண்டு போச்சுது.படிப்புமில்லை இனி ஓடிப் பயனும் இல்லை எண்ட சிலர் மட்டும் திருப்பி அடிப்பம் எண்டு அண்ணை வழி போக வழமை போல மற்றவர் எல்லாம் மந்தைகளாய் பிரிந்தனர்.

நான் தான் முன்னுக்கு ஓடிறன் எண்டு வந்தவனெல்லாம் நிண்ட இடத்திலேயே ஓடிக் கொண்டிருந்தான். யாழ்ப்பாணத் தில இருந்த நாவக்குளிப் பாலத்துக்கால சனம் எல்லாம் தென்மராட்சிக்கு, பிரச விச்சு வெளீல வரக் கஸ்டப்படிற பிள்ளை மாதிரி முக்கி,மூச்சு முட்டி, இஞ்சி இஞ்சியாய் அசைஞ்சு கொஞ்சம் கொஞ்சமாய் வந்துது. "அறுந்து போவாங்கள் இப்பிடி செய்யிறதுக்கு ஒரேடியா குண்டைப் போட்டு எல்லாரையும் சாக்காட்டி விடலாம்" எண்டு ஒரு கிழவி சொன்னது ஆருக்கு கேட்டிச்சோ தெரியேல்லை அவனடிச்ச செல் நீர்வேலி தரவை வரைக்கும் வந்து விழ குடும்பமா, குறூப் குறூப்பா ஓடத் தொடங்கினவை எல்லாம், கூட்டத்தில தாங்கள் எங்க நிக்கிறம் எண்டும் தெரியாம தங்களைச் சுத்தி ஆர் நிக்கினம் எண்டும் தெரியாம தேடிறதையும் கை விட்டிட்டு தனித்துப் போக, வாழக்கைச் சங்கிலிகள் கன அறுந்து போய் தனி வளையங்களாகியது.

விடை பெறாமலே பிரிஞ்ச கம்பஸ் பிரியாவிடையும், சொல்ல முடியாமலே போன இடம் பெயர்வுகளும் கன பேரை பிறகு சேர்க்கவே முடியாத பிரிவிடையாப் போனது தான் சோகம். ஒண்டும் மட்டும் உண்மை இடம் பெயர முதல் இருந்த யாழப்பாணம் இப்ப வரை இல்லை, இனிமேலும்.....







# யாழ்ப்பாணதில் தயாரிக்கப்பட்ட அதிசோகுசு சுற்றுலா கப்பல்

காரைநகர் உள்ள Mahasen Marine என்ற கப்பல் கட்டும் தொழில்சாலையில் தயாரிக்கப்பட்ட ஓர் அதிசொகுசு சுற்றுலா கப்பல் இது ஆகும். இந்த கப்பல் பர்மா நாட்டுக்கு வழங்க உள்ள சுற்றுலா அதி சொகுசு கப்பல் ஆகும். இதனை தயாரித்து பரீட்சார்த்த பயணம் காரைநகர் துறைமுகத்திலிருந்து 19.02.2024 அன்றைய தினம் வெற்றிகரமாக முடிந்தது.

சூரிய மின் சக்தி வசதியை கொண்ட சொகுசு கப்பல் என்பதும் குறிப்பிடத்தக்கது.இலங்கையில் குறிப்பாக வடக்கில் யாழ்ப்பாணம் கரைநகரில் இவ்வாறான ஓர் தொழில்சாலை உண்டு என்பதும் பெருமை ஆகும். கடலை ஆண்ட தமிழர்கள் நாம். கப்பலோட்டிய தமிழன் என்ற பெருமையும், கடல் கடந்து "கடாரம் வென்ற தமிழன்.." என்றெல்லாம் முன்னர் கூறுவோம். வங்க கடலை கட்டுப்படுத்தி கட்டுபாட்டில் வைத்திருந்த பொற்காலமும் உண்டு.தற்போதும் தமிழர் ஒருவரின் முயற்சிகளில் உலகில் எங்கோ ஓர் இடத்தில் இவ்வாறான கப்பல்கள் தமிழரின் பெருமையை கூறட்டும்.



25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சூர்ப்பணகை



அதிலிருந்து விலகி, சொல்லப்பட்ட விடயங்களைக் கேள்விக்குள்ளாக்குவது எல்லோரும் செய்யும் ஒரு செயலல்ல. கவிதாவிடம் இருக்கும் இலக்கிய அறிவும் தேடலும் ஏற்கனவே உள்ளதை அப்படியே படைப்பது சரியல்ல எனச் சொல்கின்றன. பொதுவாகப் பரதநாட்டிய நிகழ்வுகள் சொல்லப்பட்ட விடயங்களை அப்படியே பிசிறின்றிச் சொல்வது/ செய்வது என்ற ஒரே தடத்திற் பயணிக்கையில் சிலராவது இப்படி மாற்றி யோசிப்பது ரசிகர்களுக்குப் பயன்தருவது.

சூர்ப்பணகை ஒரு பெண்ணாக மேடையிற் தனது நியாயங்களை எடுத்துரைக்கிறாள். தான் மயங்கியமைக்கும், மையல் கொண்டதற்கும் ராமனும் காரணம் என்கிறாள். தனக்கு இழைக்கப்பட்டது அநீதி என்ற அவளின் குரல் அந்த நிகழ்வின் மேடையில் மிக உரத்து ஒலித்தது. அதைப் பார்வையாளர்களும் ஏற்கும் வகையில் மிக நேர்த்தியாகப் பிரதி வடிவமைக்கப் பட்டிருந்தது. இதுவொன்றும் இலகுவான விடயமல்ல. பலநூறு ஆண்டுகளாய்த் தூய்மையான, தெய்வத்தையொத்த (அவதாரமாக) ராமனின் கதைதான் நாம் அறிந்தது.நிறைந்த அரங்கொன்றில் அனைவர் முன்னிலையிலும் அவனது ஹதூய்மைஹ கேள்விக்குள்ளாக்கப்பட்டது அன்றுதான். அதுவும், அயோத்தியில் ராமர் கோயில் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கிய காலத்தில் இப்படியொரு பிரதியை நேர்த்தியாக மேடையேற்றியது வரவேற் கப்பட வேண்டியது – அது தற்செயலாக நிகழ்ந்திருந்தாலும்.

இந்த நடன நாடகம் ஒரு தனியரங்காகவே நிகழ்ந்தது. வேறு நாட்டிய உருப்படிகள் இதற்குள் இணையவில்லை. அரங்கின் உள்ளே நுழைந்ததும் நிகழ்வு பற்றிய ஓர் அறிமுகத்தோடு காட்சிகள் விரிந்தன. இசையும், வண்ண ஒளிக்கோலங்களும் இணைய மேடைக்குவந்த கவிதாவின் மாணவியர் எவ்விதத் தொய்வுமின்றி ஹசூர்ப்பணகை ஹயை நிகழ்த்தினர். இடைவேளை என ஒன்றே இல்லாமல் நிகழ்வின் இறுதியில், பார்வையாளர்கள் சிலரது கருத்துப் பரிமாற்றங்களோடு அரங்கு கலைந்தது. இவ்வாறான நிகழ்வு ஒஸ்லோவுக்குப் புதிது – ஒருவேளை தமிழ்கூறு நல்லுலகுக்கும்.அரங்கிலும், பின்னணியிலும் இணைந்தோர் அறுபது பேர்வரை இருக்கலாம். இசை அஸ்வமித்ரா (தமிழ்நாடு), பிரதியில் கம்பர், அருணாசலக் கவிராயர், கவிதாலட்சுமி ஆகியோரது பாடல்கள் இணைந்திருந்தன. இந்நிகழ்வுக்கான பொருட்செலவும்,நேரச் செலவும், பலரது அர்ப்பணிப்பும் கவனத்துக்குரியன. இவையெல்லாம் ஒரே மேடையேற்றத்துடன் முடிந்துபோவது எப்போதும்போல் இப்போதும் தோன்றும் ஒரு கவலை. ■

**மூலம்: வளர் சஞ்சிகை**

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மனித இனத்தின்



சுரண்டுவதற்கான பணிகளை நிறுவனங்கள் ஏற்கனவே திட்டமிட்டு வருகின்றன. பிரபஞ்சத்தின் செல்வம் நம் நாகரிகத்தை நீண்ட காலத்திற்கு நிலை நிறுத்துவதற்கு முக்கியமாக இருக்கலாம்.

### 5. அது நம் டி.என்.ஏவில் உள்ளது

மனிதர்கள் இயல்பாகவே ஆய்வாளர்கள். ஆபிரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆரம்ப இடம்பெயர்வுகளிலிருந்து கடல்களில் பயணங்கள் வரை, ஆராயவும் கண்டுபிடிக்கவும் வேண்டும் என்ற ஆசை நம் டி.என்.ஏவில் ஆழமாக வேரூன்றியுள்ளது. விண்வெளி என்பது அடுத்த எல்லை. இது நம் பிரபஞ்சத்தைப் பற்றி மேலும் அறியவும், புதிய தொழில்நுட்பங்களைக் கட்டமைக்கவும், பொதுவான இலக்குகளை நோக்கி ஒரு இனமாக இணைவதற்கும் வாய்ப்பளிக்கிறது. நாம் விண்வெளி ஆய்வை புறக்கணித்தால், நம் மனிதத்தன்மையின் அடிப்படை அம்சத்தை மறுத்துவிடுகிறோம்.

விண்வெளி ஆய்வு என்பது புகழ்மிக்க கருத்து அல்லது மனித ஆர்வத்திற்கான அங்கீகாரம் மட்டுமல்ல. இது தொழில்நுட்ப புதுமை, கிரக பாதுகாப்பு, உயிர் வாழ்வு மற்றும் வள மேலாண்மைக்கான அவசியமான பாதை. இது பெரிய கனவு காணவும் ஒன்றாக இணைந்து செயல்படவும், எல்லைகள் மற்றும் வேறுபாடுகளைத் தாண்டிச் செல்லவும் நம்மைத் தூண்டுகிறது. புதிய ஆய்வுக் காலத்தின் விளிம்பில் நிற்கையில், விண்வெளி என்பது இலக்கு மட்டுமல்ல, மனித இனத்தின் எதிர்காலத்திற்கான திசையையும் வழங்குகிறது. இந்தப் பயணத்தை ஏற்றுக்கொள்வோம் – பிரபஞ்சம் காத்திருக்கிறது! ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அகப்பையை எறிந்து விட்டு

அம்பு தைத்துளதே? என வருந்தினேன். அவனோ அதை நான் அறியவில்லையே! என்றான்.

உரவோர் மகன் அன்றோ அவன்! என்று பாடிய பொன்முடியார் பாடலைப் போலும் சங்க காலத்திலே ஆளுமையும் படைப்புத் திறனும் வீரமும் பெண்கள் பெற்றிருந்த பண்பாடு மாற்றம் கண்டது.

இன்று மீண்டும் பெண்களின் படைப் பாற்றல் அதிகரிக்கும் தன்மை காணப் பட்டாலும் திறமைமிக்க இலக்கியகர்த் தாக்கள் அகப்பையை எறிந்து விட்டு கணினியைத் திறக்க வேண்டும்.



எதிர்மறை எண்ணங்களைப் போதிக்கும் நாடகக் குகைக்குள் இருந்து வெளிவந்து நன்னெறி இலக்கியங்கள் படைக்க வேண்டும்.

**உரங்கொண்ட மங்கையர்க்கு**
**மகளிர்தின வாழ்த்துகள்** ■

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தாயகத்தில் பெண்கள் வணிக....

இந்த வருடத்தின் சர்வதேச மகளிர் தினத்தில் இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்களை உள்ளடக்கி அவர்களை வலுவூட்டுவதற்கான எமது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

புலம்பெயர்ந்தோரின் ஆதரவைத் திரட்டுவதன் மூலம், நாம் தடைகளைத் தகர்த்து ஒவ்வொரு பெண்ணும் தனது தொழில் முனைவோர் கனவுகளைத் தொடர வாய்ப்புள்ள சமத்துவமான மற்றும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்க முடியும். இது இலங்கையில் செழிப்பான, உள்ளடக்கிய சமூகத்தை ஸ்தாபிக்க உதவும்.

இந்த சர்வதேச மகளிர் தினத்தில், இலங்கைப் பெண் தொழில்முனைவோரின் வெற்றி மற்றும் வலுவூட்டல் நோக்கிய பயணத்தில் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு ஒற்றுமையுடனும் செயலுடனும் ஒன்றிணைவோம். பெண்கள் வணிக உலகில் நிலைத்து நிற்க தொழில்முனைவில் செழிக்க வாய்ப்பு நல்கி பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவோம். ■






# எனது காலம் தோறும் நாட்டியக்கலை நூலுக்கு முதல் பரிசு 'மக்கள் திலகம்' எம்.ஜி.ராமச்சந்திரன் கரங்களால் பெற்றேன்

**1983** ஜனவரி மாதம் சென்னையில் இருந்து எனது நூல் வெளியீட்டாளர், தமிழ் புத்தகாலய அதிபர் திரு. கண. முத்தையா அழைப்பெடுத்திருந்தார். அவர் கூறினார், "அம்மா, உனது நூல் காலம் தோறும் நாட்டியக்கலைக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. நீயே நேரில் வந்து அந்தப் பரிசைப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றார். எனக்குள் எழுந்த கேள்வி, 'என்ன இலங்கையர் ஆன எனக்கு தமிழகத்தில் முதல் பரிசா?'

குறிப்பிட்ட தினத்தில் பரிசைப் பெற வள்ளுவர் கோட்டம் சென்றோம். மண்டபம் நிறைந்த கூட்டம். இலங்கையில் இருந்து பரிசைப் பெற வந்திருந்த எனக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்கி இருந்தார்கள். அப்பொழுது தமிழக முதல்வராக இருந்தவர் 'மக்கள் திலகம்' எம்.ஜி..ராமச்சந்திரன் அவர்கள். அவர் வருகிறார் என்றதும் மக்களிடையே ஒரு பரபரப்பு. பரிவாரம் சூழ அவரும் வந்தார். பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசு பெறும் ஒவ்வொருவருடனும் சில வார்த்தைகள் பேசி, பரிசைத் தந்தார்.

மேடையை விட்டு வந்து எமது இருப்பிடங்களுக்கு வந்தோம். எம்.ஜி.ஆர். நடுநாயகமாக அமர்ந்தார். எனது இருக்கை M.G.R. இருந்த இடத்தில் இருந்து மூன்று இருக்கைகள் தள்ளியே இருந்தது. விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக அன்றைய ராஜ நர்த்தகி சுவர்ணமுகியின் நடனம் நடைபெற்றது.

ஆ.பு.சு. தான் அணிந்திருந்த கறுப்பு செருப்பைக் கழற்றிவிட்டு நடனத்திலே இணைந்து இசைக்கு அவரது கால்களால் தாளம் போட்டுக் கொண்டு இருந்தார். அந்தக் கால்கள்தான் எத்துனை வசீகரமானவை. அவர் தாளம் போடும் ஒவ்வொரு தட்டிற்கும் கால்களில் இரத்தம் சில்சில் என சிவந்து மறையும் அழகை இரசித்த வண்ணம் இருந்தேன். பல நடனத்திற்கான பாடல்களிலே இறைவன் பாதங்களை அரவிந்த மலரோ எனவும் செந்தாமரை மலரே கமல பாதங்கள் எனவும் பல வர்ணனைகளை இரசித்து அனுபவித்து அபிநயித்தவள். ஆனால் நிஜமாகவே ஒருவரின் பாதம் நான் அனுபவித்த அத்தனை அழகையும் கொண்டதாக இருப்பதை அன்றுதான் கண்டேன். மெய்மறந்து இரசித்தேன். எனது இந்த வியப்பை இரசிப்பை பலரிடம் கூறி மகிழ்ந்துள்ளேன்.



காலந்தோறும் நாட்டியக்கலை எனும் நூலுக்கு 1982 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் முதற்பரிசை தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வழங்குகிறார்

1965, 1966-களிலே எனது குருநாதர் நாட்டிய கலாகேசரி, பத்ம பூஷண் ஸ்ரீ வழுவூர் இராமையா பிள்ளை அவர்கள் வீட்டிலே தங்கி ஆடல் கலையைக் கற்றேன். எனது குருவும் எம்.ஜி.ஆர். -உம் நீண்ட கால நண்பர்கள். குருநாதர் வீட்டில் வாழ்ந்த காலத்தில், அவர்கள் வீட்டிலே எந்தவித ஒழுங்குமற்று குவிந்து கிடந்த பழைய படங்களை ஒழுங்காக வகை பிரித்து அல்பத்தில் ஒட்டிவைத்தேன். எனது குருநாதரும் எம்.ஜி.ஆர். உம் குருநாதரும் ஸ்ரூடியோவில் போய் எடுத்த படம் இருந்தது. எனது குருநாதர் எப்பொழுதுமே இரட்டைநாடி சரீரம் கொண்டவர். அதனால் அவர் கதிரையில் அமர M.G.R அருகே நின்றுகொண்டிருக்கிறார். விவரம் கேட்டபோது, சென்னைக்குப் புதிதாக வந்த நண்பர்கள் இருவரும் சேர்ந்து படம் எடுத்துக் கொண்டார்களாம் என விளக்கம் கிடைத்தது. நான் படித்த காலத்திலேயே எம்.ஜி.ஆர். எப்போதாவது எனது குருநாதரைப் பார்க்க வருவதுண்டு. அதிகபட்சமாக இரவு 8.30 மணிக்கு மேலேதான் வருவார்.



வீட்டிற்கு அன்யோன்யமாக பழகுபவரே உள்மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். அப்படி உள்ளே வருபவர் M.G.R. எனது ஆசான் வழமையாக ஒரு நீண்ட வாங்கிலேயே அமர்வார். அவருடன் M.G.R-உம் அமர்ந்து பேசுவார்கள். அம்மா சம்பிரதாயமாக சுகம் விசாரித்துவிட்டுப் போய்விடுவார். நானும் என் குருநாதர் மகளும் ஒரே வயதுக்காரர். நிறைய பேசுவோம். ஒரு அறையிலேயே தங்குவோம். எம்.ஜி.ஆர். போகப் புறப்பட்டதும் குருநாதர் சத்தமாக அழைப்பார். வெளியே வருவோம். நலம் விசாரிப்பார். பயம் கலந்த மரியாதையுடன் அவருக்குப் பதில் அளிப்போம். மற்றவர்கள் வந்தால் எம்மை அழைப்பது கிடையா. இது எம்.ஜி.ஆர். கேட்பதால் நாம் அழைக்கப்படுவோம். எனது ஆசிரியரை கௌரவிக்கும் முகமாக ஒரு விழா நடந்தது. எம்.ஜி.ஆர். முன்னின்று நடாத்தினார். அதற்கான கொமிட்டியில் எம்.ஜி.ஆர். பெயர் கடைசியில் இருந்தது. கருணாநிதி பெயர் முதலிலே இருந்தது. இவையெல்லாம் அவர் எனது ஆசிரியருடன் எவ்வளவு அன்யோன்யமான நண்பர் என்பதைக் காட்டின.

எனது குருநாதரின் இளைய மகன் பிற்காலத்திய பிரபல சினிமா பின்னணி பாடகரான மாணிக்கவிநாயகம். மதிய உணவின் பின் எனது ஆசிரியர் படுத்து இளைப்பாறுவார். அப்பொழுது மாணிக்கவிநாயகம் அவர் கால்களைப் பிடித்துவிடவேண்டும். அப்போது விநாயகம், "அப்பா, உனக்கும் எம்.ஜி.ஆர். -க்கும் ஒரே வயதுதானே! அவரைப் பார். குமரிப் பெண்களோடு டான்ஸ் ஆடுகிறார். நீ கிழவன் போல கால் கை பிடித்து விடு என்கிறாய்" என்பார். நான் அங்கிருந்த போது விநாயகம் பரீட்சையில் கோட்டை விட்டுவிட்டு கையிலே ஒரு Guitar உடன் திரிந்த காலம். மாணிக்கவிநாயகம் என் தம்பி போன்றவன். நான் அங்கிருந்த சமயம் எங்கே வெளியே போவதானாலும் துணைக்கு வருவது மாணிக்கவிநாயகம். நான் விநாயகத்தை இறுதியாகப் பார்த்தபோது கையில் வெற்றிலைப்பெட்டியை வைத்துக் கொண்டு வாய் நிறைய வெற்றிலையுடன் பேசினார். "ஏன்டா, இப்படி கிழவனாட்டம் பண்ணுகிறாய்? அசிங்கமாக இருக்கு" எனக் கடிந்து கொண்டேன். என்ன பண்ண? பழகிப் போய்விட்டது" என்றார்.

நான் அங்கு வசித்த காலம். இலங்கை நண்பர்கள் வந்தால் என் ஆசிரியரிடம் சினிமா ஷூட்டிங் பார்க்கக் கேட்பது உண்டு. அவரும் எம்.ஜி.ஆர். உடன் பேசி அவர் ஷூட்டிங் பார்க்கவே அனுப்புவார். நான் படித்தக் காலத்தில் இலங்கை மாணவருக்கு விசா பிரச்சனை இருந்தது. எனக்கு அப்படி இருக்கலாம் என எண்ணி என்னிடம் "உங்களுக்கு ஏதாவது பிரச்சனையானால் என்னிடம் கேட்கலாம், என்னால் உதவ முடியும்" என்றார். ஒரு சாதாரண இலங்கை மாணவியிடம் கூறியது, இவரது உதவும் மனப்பான்மை, சினிமா புகழ், பதவி அதிகாரத்துக்கும் அப்பாற்பட்டது. அதுவே அவரை 'பொன்மனச் செம்மல்' ஆக்கியது.



நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்
(அவுஸ்திரேலியா)

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளைஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# சமூக ஊடக போராளிகளுக்கு காத்திருக்கின்றது பேராபத்து

செல்வாக்கைச் செலுத்துபவையாகவும் சமூக ஊடகங்களே இருக்கின்றன. இதனூடாக கருத்துருவாக்கிகள் பலரும் உருவாகியிருக்கின்றார்கள்.

இந்த சமூக ஊடகங்களை, சமூக ஊடக செயற்பாட்டாளர்களை – அதாவது கருத்துருவாக்கிகளை முடக்குவதன் மூலம் தமக்கு எதிராக உருவாகக்கூடிய கருத்துக்களை குழிதோண்டிப் புதைத்துவிட



வேண்டும் என அரசாங்கம் நினைக்கின்றது. இதனை சட்ட ரீதியாகச் செய்வதற்கு அரசாங்கத்துக்கு சட்டம் ஒன்று தேவை. அதற்காக உருவாக்கப்பட்டதுதான் நிகழ்நிலைக் காப்புச் சட்டம். இது சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களை உளவியல் ரீதியாகப் பாதிப்பதாகவும் இருக்கின்றது.

ஏனெனில், இது மக்களுடைய கருத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், விமர்சிக்கும் போன்ற அனைத்தையும் தடுக்கின்றது. சமூக சிந்தனையாளர் ஒருவர் தான் சிந்திக்கின்ற ஒரு விடயத்தை எழுத்தில் கொண்டுவருவதையும், அதனை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதையும் இது தடுகின்றது. அதாவது, மக்கள் தமது சிந்தனைகளைக் கூட சிறைவைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இந்த சட்டத்தின் கீழ் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவர் பத்து லட்சம் ரூபா வரையிலான தண்டப் பணத்தைச் செலுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம். அல்லது, நீண்டகால சிறைவாசத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும். இந்த இரண்டுமே சாதாரண சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களுக்கு ஏற்புடையவையல்ல. ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற குழு ஒன்றுதான் எது குற்றம் என்பதைத் தீர்மானிக்கப்போகின்றது.

## எதிர்கட்சிகளின் நிலை

முக்கியமான தேர்தல்களை நாடு எதிர்கொண்டிருக்கும் நிலையில், இவ்வாறான சட்டம் கொண்டுவரப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது, மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றன. அதாவது தேர்தல் காலத்தில் சமூக ஊடகங்கள் மூலமாக வரக்கூடிய விமர்சனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்படலாம் என்பது அவர்களது கவலை. நியாயமானதுதான்.

அதேபோல, மனித உரிமை அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், உலக சாடுகள், சர்வதேச அமைப்புக்கள் என பல்வேறு தரப்புக்களிலிருந்தும் அரசாங்கத்தை நோக்கி கண்டனக் கணைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஜெனிவா கூட்டத் தொடரும் ஆரம்பமாகவிருக்கும் நிலையில், அரசாங்கத்துக்கு இது நெருக்கடியைக் கொடுப்பதாகத் தான் இருக்கின்றது. உயர் நீதிமன்றம் கூட அரசியலமைப்புக் முரணான சில விடயங்கள் இதில் உள்ளதாகக்கூறியிருந்தும் கவனிக்கத்தக்கது. அதனால் தான், இந்த சட்டத்தில் திருத்தங்கள் சிலவற்றைச் செய்வதற்குத் தயாராக



இருப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது. ஆனால்,எந்தகையில் அந்தத் திருத்தங்கள் அமையும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நிலைமைகளைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் சொன்ன கதையாகவும் இது இருக்கலாம்.

## தமிழர்களும் இலக்காவார்கள்

பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களை – அவர்களுடைய போராட்டத்தை இலக்கு வைத்து கொண்டுவரப்பட்ட ஒன்று. ஆனால், பின்னர் அது சிங்களவர்கள் மீதும் பாய்ந்தது. அது போல, இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் தமிழ் மக்கள் மீதும் பாயும். கடந்த காலங்களில் காணிகளை, உறவுகளை, உரிமைகளை இழந்த மக்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். இதனைவிட, நில ஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கல், விகாரைகளை அமைத்தல் என்பன தொடர்கின்றன. இவற்றுக்கு எதிரான போராட்டங்கள் உருவாகும் போது அவை சமயத்துக்கு எதிரான போராட்டம் எனக் காட்டப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்பவர்கள், அதற்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிடுபவர்கள் இந்த சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக்கப்படலாம். அதாவது தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள், பௌத்த விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளை எதிர்க்கும் போது, அவை மதத்துக்கு எதிரான செயற்பாடாக வரைவறுக்கப்படலாம். அதன்மூலம், இது தொடர்பாக சமூக ஊடகங்களில் கருத்து வெளியிடுபவர்களை இலகுவாக சிறைக்குள் தள்ளக்கூடிய ஆபத்து உள்ளது.

இந்த இடத்தில் முக்கியமான ஒரு கேள்வி புலம்பெயர்ந்து வாழும் வெற்றிமணி வாசகர்களுக்கு எழலாம். அதாவது சமூக ஊடகங்களில் அரசாங்கத்தை விர்சிக்கும் வகையிலான அல்லது சர்ச்சையான தமது பதிவுகளுக்கு என்ன நடக்கும் என அவர்கள் கேட்கலாம்.

இலங்கையின் எல்லைக்குள் நீங்கள் இல்லை என்ப தால், இந்த சட்டம் உங்கள் மீது பாயாது. ஆனால், தாயகத்தில் உள்ளவர்கள் யாராவது அதனைக் பகிர்ந்துகொண்டால், அவர்கள் மீது சட்டம் பாயும்!





# 171 இல் வன்முறையை விரும்பாத ரஜினி

ஜெயிலர் பட வெற்றியைத் தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த்தின் 171ஆ வது படத்திலும் சன் பிக்சர்ஸ் மீண்டும் இணைகிறது. இந்தப் படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க அனிருத் இசையமைக்கிறார்.

தற்போது, லோகேஷ் கனகராஜ் ‘தலைவர் 171’ படத்திற்கான திரைக்கதை வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்.

இப்படத்தின் முக்கிய வில்லனாக நடிக்க நடிகர் ராகவா லோரன்ஸ் தேர்ந்தெடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஜினியின் இளவயது காட்சிகளை உருவாக்க படக்குழு டீ ஏஜிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், நடிகர் ரஜினிகாந்த்திடம் இப்படத்திற்கான கதையை லோகேஷ் கனகராஜ் சொன்னதாகவும் ஆனால், கதையில் மாற்ற செய்ய வேண்டும் என ரஜினி அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

முக்கியமாக, அதிக வன்முறை, போதைப்பொருள் காட்சிகள் இடம் பெறாததுபோல் கதையை எழுதச் சொல்லியிருக்கிறாராம்.

# 4 கோடி கேட்கிறேனா?

நடிகை ராஷ்மிகா மந்தனா குறுகிய காலத்தில் தென்னிந்திய அளவில் புகழ்பெற்று அதன் மூலம் பொலிவுட்டிலும் நுழைந்து தற்போது அங்கேயும் பல படங்களில் நடித்து வருகிறார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரன்பீர் கபீருடன் அவர் இணைந்து நடித்த அனிமல் என்கிற திரைப்படம் வெளியாகி 900 கோடி ரூபா வசூலை தொட்டது. இதனை தொடர்ந்து ராஷ்மிகா தனது சம்பளத்தை அதிகமாக உயர்த்தி விட்டார். அவர் நான்கு முதல் இருந்து நான்கரை கோடி சம்பளம் கேட்பதாக ஒரு செய்தி வெளியானது. இந்த செய்திக்கு பதில் அளித்துள்ள ராஷ்மிகா, இதை பார்க்கும்போது எனக்கு வியப்பாக இருக்கிறது. இவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல நானும் இதை தயாரிப்பாளர்களிடம் இதே அளவில் சம்பளம் கேட்கலாம் என நினைக்கிறேன்.

அவர்கள் என்னிடம் ஏன் என கேட்டால் மீடியாவில் இப்படி ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. அதனால் அவர்களுடைய வார்த்தைப்படி நான் வாழ வேண்டும் என நினைக்கிறேன். நான் என்ன செய்யட்டும் என அவர்களுக்கு பதில் அளிக்க போகிறேன் என்று நகைச்சுவையாக இந்த செய்தியை அணுகியுள்ளார்.




# விஜயின் கடைசிப்பட இயக்குநர்?

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் விஜய். இவர், தற்போது வெங்கட்பிரபு இயக்கத்தில் G.O.A.T என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

அனிருத் இசையமைக்கிறார். இவரது 68 ஆவது படம் G.O.A.T என்ற நிலையில், அரசியலுக்கு வந்துவிட்டதால் இவரது கடைசி படம் விஜய்69 என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், எச் .வினோத் நடிகர் விஜய்க்கு ஒரு கதை ஒன்றை கூறியுள்ளதாக உறுதிப்படுத்தாத தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே கமல்ஹாசன் நடிக்கும் படத்தை வினோத் இயக்கவுள்ளதாக கூறப்பட்ட நிலையில்,



கமல்ஹாசன் நிறுவனத்தில் இப்படத்தை இயக்க தடையில்லா சான்று கிடைத்தால் விஜய்யின் படத்தை எடுக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.



# மகான்-2?

விக்ரம் மற்றும் அவருடைய மகன் துருவ் விக்ரம் நடிப்பில் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் உருவான திரைப்படம் மகான்.

இந்த படம் கடந்த 2022 ஆம் ஆண்டு நேரடியாக ஓடிடியில் வெளியான நிலையில் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.


இந்த நிலையில் இந்த படத்தின் இரண்டாம் பாகம் உருவாக்க வேண்டும் என்று ரசிகர்கள் சில மாதங்களாக வேண்டுகோள் விடுத்த நிலையில் விக்ரம் ‘மகான் 2’ படம் குறித்து அப்டேட்டை தெரிவித்துள்ளார்.

‘மகான் 2’ என குறிப்பிட்டு கேள்விக் குறியோடு பதிவு செய்துள்ள விக்ரம் இரண்டு அட்டகாசமான ஸ்டில்களையும் வெளியிட்டுள்ள நிலையில் அந்த ஸ்டில்கள் தற்போது இணையதில் வைரலாகி வருகின்றன.






## வெற்றிமணி திருமண சேவை



மணமகன் தேவை

யேர்மனியில் Biologie Master படித்து முடித்து வேலை செய்யும் நற்குணமுள்ள 30 வயது சைவ சமயத்தை சேர்ந்த பெண்ணுக்கு படித்த குணமுள்ள மணமகனை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்: 015781663466




Jasmine Silk House
ஆடைகளின் ராணி
அனைத்து ஆடைகளும்
சித்திரை தமிழ் புத்தாண்டை
முன்னிட்டு மாபெரும்
மலிவு விற்பனை.
15.03.2024 முதல் 13.04.2024 வரை
புதிய வரவுகள் உங்களை வரவேற்கின்றது
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart நகரில்...
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Ludwig str.87a
70197
Stuttgart
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


வெகு விரைவில் Dortmund நகரில்....
KANTHAN JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
OPENING SOON
Tel : 01728684 203
Rheinische.str.72 | 44137.Dortmund | 0049.1728684203 | Germany


FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696 | Fax: 0231/8602698